அறைவு 04 இயம் 37 April 16-22, 2016

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

IELTS-A1
spouse visa
@
VEAL ENGLISH COLLEGE
026 222 76 22 - 0770203201

HELLO MOBILE WORLD

122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# "கிழக்கு மாகாணசபையில் ஐ.தே.க வின் ஆட்சி"



**கிழக்கு மாகாண சபையில் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி மலரும் என முன்னாள் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும், தற்போதைய திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின - ருமான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.**

கடந்த வாரம் மூதூர் நகரில் ஐக்கிய தேநியக் கட்சியின் உயர் பீட உறுப்பினர்களின் தெரிவின் போதே இம்ரான் இக் -கருத்தை வெளியிட்டார்.

அத்துடன் தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உரிய இடம் வழங்கப்பட வில்லை என்பதுடன் தேசிய அரசாங்கத்தை அமைத்து நல்லாட்சிணை உருவாக்க முயற்சித்த ஐக்கிய தேசியக் கட்சியின் தியாகத்தாலேயே தற்பொதைய அரசு நிலைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எமது மகாணத்தை பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கே ஓங்கியிருக்கிறது மாகாண-சபைக்கு உட்பட்ட.........

பக் 17

## அனல் மின்நிலையத்திற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை



பக் 17

## தமிழ்ப் பேரவையின் தீர்வில் "தமிழ்த் தேசம்"

தமிழ்ப் பேரவையினால் முன் மொழியப்பட்டுள்ள அரசியலமைப்புத் திருத்த யோசனைகளின் இறுதி வரைபில் "தமிழ்த் தேசம்" என்ற சொற்பதத்தைப் பிரயோகிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற தமிழ்ப் பேரவையின் அமர்வுகளின் போதே இவ்விணக்கம் காணப்பட்டு - ள்ளதாக அப் பேரவையின் இணைத் தலைவர்களுள் ஒருவரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்.........



பக் 17

## 19000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடத்தல்

ஸ்ரீலங்காவின் நிதியில் இருந்து 19,000 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சட்ட விரோதமாகக் கடத்தப்பட்டு - ள்ளதாகச் சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

2004ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டின் இறுதி வரைக்குமான காலப்பகுதியிலேயே இந்நிதி வெளிநாடுகளுக்குக் கடத்தப் -பட்டுள்ளதாகவும்.........



பக் 17

## திருமலை மாணவர் கொலைக்கு நீதிகேட்டு அமெரிக்க மாணவர் ஆர்ப்பாட்டம்




திருகோணமலைக் கடற்கரையில் 2006ம் ஆண்டு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக வழக்கு விசாரணைகள் நடைபெற்று - வரும் ஐந்து மாணவர் படுகொலைக்கான நீதியை வழங்குமாறு கோரி அமெரிக் - காவில் மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்- பட்டுள்ளது.

கொல்லப்பட்ட ரஜிதர் மனோகரன் உட்பட ஐந்து தமிழ் மாணவர்களின் மரணத்திற்கு நியாயத்தை வழங்குமாறு

பக் 17

விம்பம் 01 தெறிப்பு 02
கண்ணாடி
தமிழ் மாத இதழ்

திருகோணமலையில் இருந்து வெளியாகும் சனரஞ்சக மாத இதழின் இரண்டாவது இதழ் எதிர்வரும் 20ம் திகதி உங்கள் கைகளில்......

விலை ரூபா 90.00
உங்கள் வீடு தேடி வரும் கண்ணாடியைப் பெற அழையுங்கள்
0771 99 84 99
026 2227677
அனைத்துப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## ஒரு தேசம் - ஒரே தேசம்

சிங்களப் புத்தாண்டு வாழ்த்துக்களை வழங்கியுள்ள ஸ்ரீலங்காவின் நல்லாட்சிக்கான சனாதிபதி ஒரு நாட்டவராகவும் ஒரு தேசத்தவராகவும் எமது ஒற்றுமையைப் பலப்படுத்துவோம் என சிறீலங்கா வாழ் சிங்கள, தமிழ் மக்களுக்குத் தமது வாழத்துச் செய்தியை வழங்கியுள்ளார்.

எந்தவொரு நிகழ்விலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் "ஒரு தேசம்" என்பதை வலியுறுத்தி வரும் நல்லாட்சி அரசின் ஆட்சிக் கூட்டணியின் உயர்மட்ட அதிதிகள் தமிழ் மக்களையொரு தனித்தேசமாக எண்ணங்-கொள்ளச் செய்ய எச்சந்தர்ப்பத்திலும் வாய்ப்பளிக்கப் போவதில்லை என்பதை வலியுறுத்தியே வருகின்றனர்.

தனித் தேசத்திற்கான சர்வதேச அங்காரத்தைப் பெற்றுக்கொள்ள, அதாவது சர்வதேசச் சட்டங்களின் படி தனித்தேசமொன்றைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து நடைமுறைத் தேவைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள தமிழ் இனத்தின் உரிமையை மறக்கடிக்கச் செய்யும் வகையிலேயே இத் திட்டமிட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

2016ம் ஆண்டில் நல்லதொரு தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்குவோம் என்பதை வெளிப்படுத்திவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அந்நல்லதொரு தீர்விற்குள் வடக்குகிழக்கு இணைப்பு என்பதை உட்படுத்தி வைத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறு வடக்குகிழக்கு இணைந்த தாயகத்திலேயே தீர்வு முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற நிலையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உருவாக்கிய அணியாகத் தமிழ் மக்கள் பேரவை உள்ளது.

வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்பதே தமிழ்த் தேசத்தின் அடிப்படைகளுள் ஒன்று. எனவே தமிழ்த் தேசம் என்ற ஒன்று ஸ்ரீலங்காவில் இல்லை என்று கூறிவரும் நல்லாட்சி அரசானது எவ்வாறு வடக்குகிழக்கு இணைந்த வகையில் தமிழர்கள் முன்மொழியும் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளப் போகின்றது??

ஸ்ரீலங்காவினுள் இரண்டு தேசங்களை ஏற்றுக்கொள்ளத்தக்கவகையிலும், அவ்விரு தேசங்களிற்கும் சமமான ஆட்சி அதிகாரங்களை வழங்கும் வகையிலும், பல்லின, பல்கலாசார நாடு ஸ்ரீலங்கா என்பதனையும் ஏற்றுக்கொண்ட வகையிலேயே புதிய அரசியலமைப்பு அமைய வேண்டும் என பெரும்பாலான தரப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

எனினும் அவ்வகையான வலியுறுத்தல்கள் ஒரு புறம் இருக்க "ஒரு தேசம்" என்ற குரல் இப்போது "ஒரே தேசம்" எனப் பலமாக உச்சரிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்கள் ஒரு தேசத்தவராகக் கருதப்பட வேண்டும் என தமிழ் மக்களின் அரசியல் முன்னோடிகள் தீர்மானித்திருந்தனர்.

அவ் ஒரு தேசக் கொள்கைதான் தமிழ் மக்களை என்றும் தனித்துவமான இனமாக கருத இடமளிக்கும் என்பதையும் அவர்கள் தெரிந்தே வைத்திருந்தனர்.

அந்தக் கருத்தை மறுதலிக்கக் கூடாது என்பதற்காகவே திருகோணமலையில் முதன் முதலாகக் கூட்டப்பட்ட தமிழரசுக் கட்சியின் மாநாட்டில் முதலாவது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது- தமிழரின் தனித்தேசக் கொள்கை. இம் மாநாடு 1951ல் நடைபெற்றது.

எனினும் அதன் பின்னரான 65 வருட காலப்பகுதியில் அக்கொள்கை தொடர்பான பிரக்ஞை தமிழ்ச் சமூகச் சக்கரத்தில் சுரத்தற்பு போகச் செய்யப்பட்டது. அதற்கு மற்றொரு காரணமாகக் கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ''தனிநாடு'' என்ற கொள்கை முன்நிறுத்தப்பட்டமையும் காரணமாகும்.

எனினும் தற்போது தனிநாட்டுக் கொள்கையானது அரசியல் சட்டத்தின் படி மறுக்கப்பட்டதொன்றாகவும் சர்வதேசத்தின் கண்களுக்குப் பயங்கரவாத முலாம் பூசப்பட்டதாகவும் தெரிவதால் "தமிழ்த் தேசம்" என்ற பிரிவினையற்ற, சுயநிர்ணய பலம் பொருந்திய, பயங்கரவாத முலாம் பூசப்பட முடியாத கொள்கையைத் துலக்கி நிற்கவேண்டிய கடப்பாடு எம்முன் நிற்கின்றது. அதனைத் தடுக்கவே இந்த "ஒரு தேசம்-ஒரே தேசம்" என்ற வாதம்....

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூபா. மூவாயிரம் கொடுப்பனவு

கிழக்கு மாகாணத்தில் உள்ள 3537 முன் பள்ளி ஆசிரியர்களுக்கு தலா 3000 ரூபாய் ஜனவரி 2016 முதல் மாதாந்தம் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.என கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் இடம் பெற்ற ஊடகவியாளர் சந்திப்பின் போது இத் தகவலை தெரிவித்தார். "கிழக்கு மாகாணத்தில் 1832 முன்பள்ளிகள் உள்ளன. அம்பாறையில் 465 தமிழ் மொழி பாடசாலைகளும் 303 சிங்கள மொழி மூல பாடசாலைகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 571 தமிழ் மொழி மூலமான பாடசாலைகளும், திருகோணமலையில் 368 தமிழ் மொழி மூல பாடசாலைகளும் 125 சிங்கள மொழி மூலமான பாடசாலை -களும் இயங்கி வருகின்றன.

இப்பாடசாலைகளில் 44,515 தமிழ் மாணவர்களும் 9,981 சிங்கள் மாணவர்களும் உள்ளனர். ஆசிரியர்கள் மொத்தமாக 4,064 பேர் உள்ளனர். இவர்களில் 3,108 தமிழ் ஆசிரியர்களும் 956 சிங்கள ஆசிரியர்களும் உள்ளனர். இவர்களுள் 78 ஆசிரியர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள், சிவில் பாதுகாப்பு பிரிவு, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவங்களுமாக மொத்தம் 527 ஆசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வருகிறது. மிகுதி 3,537 பேருக்கான மாதாந்த கொடுப்பனவு இவ்வருடம் ஜனவரி முதல் 3,000 ரூபாய் வழங்கப்பட -வுள்ளது எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் முன்பள்ளி பணியகத்தின் தவிசாளர் பொன் செல்வநாயம் உட்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அச்சுதன்)

## வெப்பத்தில் தப்பிக்கும் வழிகள்

வெப்பத்தில் இருந்து தப்பிக்கும் சில வழிமுறைகள் சிலவற்றை கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் பேராசிரியர் ஜெயமினி செனவிரத்ன தெரியப்படுத்தியுள்ளார்.

சூரிய வெளிச்சம் நேரடியாகப் படுவதைத் தவிர்த்துக்கொள்வதே சிறந்த வழி எனத் தெரிவித்துள்ள அவர் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரைக்குமான காலப்-பகுதியில் சூரிய வெளிச்சம் நேரடியாக உடலின் மீது படுவதைத் தவிர்க்கும் வகையில் உடைகளை அணிய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட நேரங்களில் வெளியே செல்பவர்கள் குடை அல்லது தொப்பி அணிவது கட்டாயம் என்பதுடன் அத் தொப்பியானது சற்று நீண்ட சுற்று வட்டத்தைக் கொண்டிருப்பதே சிறந்தது என்றும் தெரிவித்துள்ளார். உடலை இறுக்காத பருத்தி ஆடைகளை அணிவதுடன் நீண்ட கை கொண்ட ஆடைகள், முழுக்காற்சட்டைகள் பொருத்தமானவை எனவும் தெரிவித்துள்ளார்.


## அரபுக்கல்லூரிக்குப் புதிய கட்டடம்

(அச்சுதன்)

மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லாரியின் புதிய நிர்வாகக் கட்டட திறப்புவிழா வெள்ளிக்கிழமை மாலை(8) இடம்பெற்றது.

அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ.முபாறக் மதனி, அபிவிருத்திக்கும் பயிற்சிக்குமான சர்வதேச கலாசார மையத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எஸ்.எல்.நவ்பர் மதனி, சமூக சேவையாளர் எச்.எல்.எம்.நியாஸ் ஹாஜி ஆகியோர் இணைந்து புதிய நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இதன்போது நத்வதுல் உலமா அரபுக் கல்லாரியின் ஸ்தாபகர்களின் பெயர் விபரம் அடங்கிய படிகம் ஒன்றும் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் வரலாற்றைக் கூறும் படிகம் ஒன்றும் திரை நீக்கம் செய்யப்பட்டது.



## தம்பலகாமத்தில் வழிப்பறி கொடி, நகைகள் கொள்ளை

தம்பலகாமத்தில் நடைபெற்ற கொள்ளைப் பாணியானது மிகவும் விசித்திரமான வகையில் அமைந்திருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கி-ன்றன.

கடந்தவாரம் தம்பலகாமத்தில் நடைபெற்ற திருமண வைபவமொன்றில் கலந்து கொண்டு விட்டு கணவனும் மனைவியும் உந்துருளியில் வீடு நோக்கிப் பயணப்பட்டுள்ளனர்.

முன்னிரவு நேரத்தில் அவர்கள் பயணித்த போது அவர்களின் பின்னால் வந்த மற்றொரு உந்துருளி அவர்களை மோதித் தள்ளியுள்ளது.

விபத்தடைந்த இருவரும் சுதாகரிக்கும் முன்னரே விழுந்து கிடந்த பெண்ணின் கழுத்தில் இருந்து தாலிக்கொடி உட்பட நகைகளை வெட்டி அகற்றிக்கொண்டு பின்னால் வந்த உந்துருளியாளர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

தமக்கு ஏற்பட்டது விபத்து என்றே முதலில் நம்பியிருந்த தம்பதியினர் சற்று நேரத்தின் பின்னரே அது திட்டமிடப்பட்ட விபத்து என்பதனையும் உண்மையில் ஒரு கொள்ளை நடவடிக்கை என்பதனையும் உணர்ந்து கொண்டனர்.

திட்டமிட்ட இவ்விபத்தின் போது தலையில் காயமடைந்த பெண்மணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார்.

காவல்துறையில் மேற்கொள்ளப்-பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைய குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

## மோதிவிட்டு ஓடிய ஜீப் வண்டி இராணுவத்திற்கு உரியது

திருகோணமலை பிரதான வீதியில் முச்சக்கரவண்டியை மோதித் தள்ளி இருவரின் உயிருக்கு உலைவைத்த ஜீப் வண்டி 22ம் படைப்பிரிவு இராணு -வத்திற்குச் சொந்தமானது என்பதை காவல்துறையினர் கண்டு பிடித்துள்ளனர்.

கடந்த 11ம் திகதி இரவு நடைபெற்ற இவ்விபத்து சாம்பல்தீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த வாசுகி (59) அவரது மகளான சிவதாரணி (33) ஆகியோரைப் பலிகொண்டு ஜே.அருள்ராஜ் (31), கே.ராஜேஸ்வரி (70) ஆகியோரைப் படுகாயப்படுத்தியது.

காவல்துறையினால் கைது செய்யப்பட்ட இராணுவ ஜீப் வண்டி ஓட்டுனர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக பொது விடுமுறைகள் வழங்கப்படும் நாடு – இலங்கை

இலங்கையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தத்தினால் பல பில்லியன் டொலர்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் நாட்டின் பொருளாதாரம் பாரிய பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதனை நிவர்த்திப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் நாட்டில் வழங்கப்படும் 25 பொது விடுமுறைகள் பெரும் தடையாக அமைவதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.
ஆசிய நாடுகளில், இலங்கையிலேயே வருடம் ஒன்றுக்கு அதிக விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. சிங்கப்பூரில் 13 நாட்களும் ஜப்பானில் 17 நாட்களும், இந்தோனேஷியாவில் 19 நாட்களும், தாய்லாந்தில் 20 நாட்களும் பொது விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. அத்துடன், அமெரிக்காவில் 09 நாட்களும் அவுஸ்திரேலியாவில் 10 நாட்களும் பொது விடுமுறைகளாக உள்ளன.
பௌத்தர்கள் புனித நாளாகக் கருதும் பௌர்ணமி தினங்கள் வழங்கப்படும் பொது விடுமுறைகளே, வருடத்தில் 12 நாட்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.


## காவல் நிலையத்தில் ஆயுத திருட்டு பணியில் இருந்தோர் பணி நீக்கம்

லக்கல காவல் நிலையத்தின் பாதுகாப்பு பெட்டியிலிருந்த ரி - 56 ரக துப்பாக்கி ஒன்றும், ஐந்து ரிவோல்வர்களும் அடையாளந் தெரியாத ஒருவரால் திருடப்பட்டுள்ளது. இந்த ஆயுத திருட்டு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த காவல் உத்தியோகத்தர்கள் நால்வர் பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளனர். கான்ஸ்டபிள் இருவரும், சார்ஜன்ட் ஒருவரும், பாதுகாப்பு உதவியாளர் ஒருவரும் பணிநீக்கம் செய்யப் பட்டுள்ளதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட ஆயுத திருட்டு தொடர்பிலான விசாரணைகள் குற்றப்-புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆயினும், இந்த திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப் படவில்லை. சாரம் மற்றும் மேலாடை அணிந்த ஒருவரே துப்பாக்கிகளை திருடியுள்ள தாக தகவல் கிடைத்துள்ளதென காவல்நிலைய ஊடகப் பேச்சாளரும் உதவிக் காவல் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.



## கோத்தபாயவிற்கும் நீக்கப்படுகிறது இராணுவ பாதுகாப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இராணுவ பாதுகாப்பை நீக்கியது போல் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோதாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பும் நீக்கப்படுமென பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் அந்த ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கையில் அவசரகால நிலைமை தவிர மற்றைய காலங்களில் தனி நபர்களுக்கு இராணுவத்தினரின் பாதுகாப்பை வழங்க முடியாது என பாதுகாப்பு சபை கூட்டத்தின் போது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்படி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பை நீக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு 103 இராணுவத்தினர் அடங்கலாக 256 பேரைக் கொண்ட பாதுகாப்பு பிரிவு வழங்கப்பட்டுள்ளது.
இதன் பிரகாரம் இராணுவத்தினரை நீக்கி அந்த இடத்திற்கு காவல்துறையினரும் மற்றும் விசேட அதிரடிப் படையினரும் வழங்கப்பட்டுள்ளனர் தற்போதைய ஜனாதிபதி, பிரதமருக்கே இராணுவ பாதுகாப்பு கிடையாது. அவசர நிலைமைகளின் போது மட்டுமே அவர்களின் பாதுகாப்புக்கு இராணுவத்தை ஈடுபடுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

## விரைவில் நாமல் ராஜபக்ச கைது செய்யப்படலாம்

பணச்சலவை குற்றச்சாட்டு சம்பந்தமாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நாமல் ராஜபக்சவுக்கு எதிராக விசாரணைகளை நடத்தி வருவதுடன் பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை நடத்தி வருகிறது. இந்த சம்பவங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை கைது செய்ய பரிந்துரைக்கும் அளவிற்கு ஏதுவான காரணங்கள் இருப்பதாக காவல்துறை உயர்மட்ட தரப்பு தகவல்கள் கூறுகின்றன.

வசிம் தாஜுடீன் மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வு திணைக்களம் சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை தற்போது ஆரம்பித்துள்ளது. சந்தேக நபர்களில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் மெய்ப்பாதுகாவலர் கேப்டன் திஸ்ஸ உள்ளிட்ட சந்தேக நபர்கள் அதில் அடங்குகின்றனர்.

## போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது

பாதுகாப்பற்ற புகையிரத கடவை காவலாளிகள் மேற்கொண்டிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்துள்ளது. நேற்றுடன் வேலை நிறுத்தப் போராட்டம் நிறைவுக்கு வந்ததாக இலங்கை பாதுகாப்பற்ற புகையிரத கடவை காவலாளிகள் சங்கத்தின் செயலாளர் நிமல் சந்திரசிறி கூறினார்.

கடந்த 13ம் திகதி மாலை 6.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டம் நாளை மாலை 6.00 வரை இடம்பெற இருந்தது.

எவ்வாறாயினும் போக்குவரத்துப் பிரதியமைச்சர் அசோக அபேசிங்கவினால், பாதுகாப்பற்ற புகையிரத கடவை காவலாளிகளின் ஊதியத்தை அதிகரிப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட பின்னர் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர தீர்மானித்ததாக நிமல் சந்திரசிறி கூறினார்.

## 146 பேர் புகலிடம் கோரியுள்ளனர்.


இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் சுவிட்ஸர்லாந்தில் புகலிடம் கோரி 146 ஸ்ரீலங்கா பிரஜைகள் விண்ணப்பம் செய்திருப்பதாக அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது. எனினும் கடந்த வருட காலாண்டுடன் இதனை ஒப்பிடுகையில் 45 சதவீத வீழ்ச்சியை காணமுடிந்திருப்பதாகவும் சுவிட்ஸர்லாந்தின் அரச செயலகம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடுகையில் தற்போது கிடைக்கப்பெறும் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்களில் வீழ்ச்சி தன்மை ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## புத்தாண்டு கொண்டாடியோரிடையே வாள் வீச்சு

மாத்தளை, கலேவெலப் பிரதேசத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது, கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டில் ஐவர் காயமடைந்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். வாள்வெட்டுக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை

## கரையொதுங்கிய இலங்கைப் படகு



தமிழகத்தின் ராமேஸ்வரம், தனுஷ்கோடி பகுதிக்கு இலங்கையிலிருந்து சென்றதாகக் கூறப்படும் மர்மப் படகால் பரபரப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மர்மப் படகில் இருந்தவர்கள் குறித்து இந்திய மத்திய மாநில உளவுப் பிரிவு காவல்துறை தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக எமது ராமேஸ்வரம் செய்தியாளர் குறிப்பிட்டார்.
தனுஷ்கோடியை அண்மித்துள்ள அரிச்சல்முனை பகுதியில் சந்தேகத்திற்கிடமான இலங்கைப் படகொன்று கரையொதுங்கியுள்ளதாக பிரதேச மீனவர்கள் வழங்கிய தகவலின் பிரகாரம் தமிழக சுங்க அதிகாரிகள் அதனை மீட்டுள்ளனர். படகில் வந்தவர்கள் அங்கிருந்து ஏதேனும் பொருட்களை ஏற்றிச்செல்ல அல்லது இறக்கிச் செல்வதற்காக வந்துள்ளனரா எனவும், அல்லது அங்கிருந்து நபர்களை ஏற்றிச்செல்ல அல்லது இறக்கிவிட்டுச் செல்லும் நோக்கில் வந்துள்ளனரா என்ற கோணங்களில் உளவுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.
குறிப்பிட்ட படகில் 25 குதிரை வலுகொண்ட எஞ்சின் பொருத்தப்பட்டிருந்ததுடன், 30 லிற்றர் மண்ணெண்ணெய் மற்றும் மீன்பிடி வலைகளும் காணப்பட்டதாக தமிழகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர்ச் செய்திகள்

# இராணுவ வாகனத்துடன் விபத்து

### இருவர் பலி

((சேனையூர் நிருபர்))

திருகோணமலை பிரதான வீதியில் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த தாயும் மகளும் மரணமடைந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சாம்பல்தீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த வாசுகி (வயது 59) அவரது மகளான சிவதாரணி (வயது 33) ஆகியோரே இவ்விபத்தில் மரணமடைந்துள்ளனர். இதேவேளை, அதே இடத்தைச் சேர்ந்த ஜே.அருள்ராஜ் (வயது 31), கே.ராஜேஸ்வரி (வயது 70) ஆகியோர் படுகாயமடைந்துள்ள நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கர வண்டியுடன் திருகோணமலை 22ஆவது இராணுவப் படையணிக்குச் சொந்தமான டிபெண்டர் ரக வாகனம் மோதி இந்த விபத்துச் சம்பவித்துள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த விபத்து இடம்பெற்ற இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட காவல்துறையினருக்கு திருகோணமலை 22ஆவது இராணுவப் படையணிக்குச் சொந்தமான டிபெண்டர் ரக வாகனமே முச்சக்கரவண்டியை மோதிவிட்டுத் தப்பிச்சென்றமை தெரியவந்துள்ளது. இந்த விபத்தைத் தொடர்ந்து குறித்த வாகனத்தின் சாரதியான 29 வயதுடைய இராணுவ வீரரை கைதுசெய்துள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

# கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு





கிழக்கு மாகாணத்தில் உள்ள 3537 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தலா 3000 ரூபாய் ஜனவரி 2016 முதல் மாதாந்தம் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது என கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

இது தொடர்பாக கடந்த திங்கட்கிழமை 11.04.2016 கல்வி அமைச்சின் கலந்துரையாடல் மண்டபத்தில் இடம் பெற்ற ஊடகவியாளர் சந்திப்பின் போது இந்த தகவலை தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் கிழக்கு மாகாணத்தில் 1832 முன்பள்ளிகள் உள்ளது. அதாவது அம்பாறையில் 465 தமிழ் மொழி பாடசாலைகளும் 303 சிங்கள் மொழி மூல பாடசாலைகளும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 571 தமிழ் மொழி மூலமான பாடசாலைகளும் திருகோணமலையில் 368 தமிழ் மொழி மூல பாடசாலைகளும் 125 சிங்கள மொழி மூலமான பாடசாலைகளும் இயங்கி வருகின்றன.

இதில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மொத்தமாக 4064 உள்ளனர். இவர்களில் 3108 தமிழ் ஆசிரியர்களும் 956 சிங்கள ஆசிரியர்களும் உள்ளனர். இதில் உள்ள 78 ஆசிரியர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களும் சிவில் பாதுகாப்பு பிரிவில் இருந்து சில ஆசிரியர்களக்கும் தனியார் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுமாக மொத்தம் 527 ஆசிரியர்களுக்கு ஏற்கனவே கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது.

### மே 02 முதல்

# வரி 15%மாக அதிகரிப்பு




வரியை 11% ல் இருந்து 15% ற்கு அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் மே 02 முதல் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பானது சுகாதாரத் துறை மற்றும் தொடர்பாடல் துறைகளுக்கு நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, கடந்த ஏப்ரல் மாதம் 01ம் திகதி முதல் 15% ஆக அதிகரிக்கப்படவிருந்த வட் வரி மறு அறிவித்தல் வரும் வரை இடைநிறுத்தப்படுவதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் கல்யாணி தஹநாயக்க கடந்த 01ம் திகதியன்று வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். அதன்படி மறு அறிவித்தல் வரும் வரை ஏற்கனவே இருந்தது போன்று 11% ஆக பெறுமதி சேர் வரி இருக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், எதிர்வரும் மே மாதம் 2ம் திகதி முதல் அமுலாகும் வகையில் பெறுமதி சேர் வரி (VAT) 15% ஆக அதிகரிக்கப்பட உள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

## மலைமுரசு MALAIMURASU
## இலங்கைச் செய்திகள்

# ஐ.எஸ்.ஐ.எஸ் இலங்கையிலும் தலைதூக்குமா? – சாகல ரட்ணாயக்க

இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் தலை தூக்குவதைத் தடுப்பதற்காக இஸ்லாமிய அடிப்படை வாதம் மற்றும் முஸ்லிம் பயங்கரவாதம் செயற்படுகின்ற வெளிநாடுகளிலிருந்து வெளிநாட்டுக் கல்வி பயின்று, தொழில் புரிந்து அல்லது வேறு பணிகளுக்காகச் சென்று திரும்பி வருகின்ற முஸ்லிம் இனத்தவர்கள் மற்றும் இலங்கையிலுள்ள இனங்காணப்பட்டுள்ள கடும் போக்காளர்களின் குடிவரவு மற்றும் குடியகல்வு செயற்பாடுகளைத் தீவிரமாக கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சட்டம், ஒழுங்குகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சரான சாகல ரட்ணாயக்க தெரிவித்தார்.

அது மட்டுமன்றி கடும்போக்கு கருத்துகள் வெளியாகும் இடங்கள், அவ்வாறான சொற்பொழிவுகளை ஆற்றுவோர் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் சாகல ரட்நாயக்க சுட்டிக் காட்டினார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சர் சாகல ரட்ணாயக்க மேலும் கூறுகையில் இலங்கையில் ஐ.எஸ். ஐ.எஸ். பயங்கரவாதிகளின் செயற்பாடுகள் உள்ளனவா என்பது தொடர்பில் பரந்த அளவிலும் தொடர்ச்சியாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உலகில் இவ்வாறு செயற்படும் பல குழுக்கள் தொடர்பில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. நாம் இக்குழுக்கள் தொடர்பில் சர்வதேச புலனாய்வு அமைப்புகளுடன் தொடர்பில் உள்ளோம். அத்துடன் இலங்கையில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் செயற்பாடுகளில் ஈடுபடுவதை தடுக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றார்.



# முதலீட்டுக்கு சவுதி இணக்கம்

சவூதி இளவரசர் அப்துல் அஸீஸ் பின் பைசல் ஸ்ரீலங்காவில் முதலீடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார். உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சவூதி அரேபியா சென்றுள்ள இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கடந்த வியாழக்கிழமை சவூதி இளவரசர் அப்துல் அஸீஸ் பின் பைசல் பின் அப்துல் மஜீத் அஸ் சவூதை ஜிந்தாவில் அமைந்துள்ள அவரது மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பின் போது இளவரசர் அப்துல் அஸீஸ் பின் பைசலை ஸ்ரீலங்காவில் முதலீடு செய்யுமாறும், ஸ்ரீலங்காவின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யுமாறும் இராஜாங்க அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார். இதனை ஏற்றுக்கொண்ட சவூதியரேபிய இளவரசர் ஸ்ரீலங்காவிற்கு விஜயம் செய்வதற்கும் முதலீடு செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளார்.



# நுரைச்சோலை அனல்மின் நிலையம் நாளை முதல்

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் செயலிழந்துள்ள நுரைச்சோலை மூன்றாவது மின் பிறப்பாக்க இயந்திரத்தை இன்றைய தினத்திற்குள் வழமைக்குக் கொண்டுவர முடியும் என்று மின்சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. செயலிழந்திருக்கும் மின்பிறப்-பாக்க இயந்திரத்தை சரிப்படுத்து-வதற்கான முயற்சியில் அனுசக்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஈடுபட்டதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலுள்ள மூன்றாவது மின்பிறப்பாக்க இயந்திரம் சுமார் 300 மெகாவோட் மின்சாரத்தை பிறப்பிக்கும் வலுவுடையது. எவ்வாறாயினும் அந்த இயந்திர செயற்பாட்டை வழமைக்கு கொண்டுவரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# உலகச் செய்திகள்

## ஏற்படவிருந்த பாரிய மோதல் தடுத்து நிறுத்தம்

அமெரிக்கா



கடந்த வியாழக்கிழமை போல்டிக் கடலில் நிறுத்தப்பட்டிருக்கும் தமது போர்க்கப்பலுக்கு அருகில் ரஷ்யாவிற்கு உரிய ஜெட் போர் விமானம் ஒன்று பறந்ததாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது. குறித்த அந்த விமானத்தை சுட்டு வீழ்த்த வாய்ப்பு இருந்ததாகவும் தாம் அவ்வாறு செய்ய முற்படவில்லை எனவும் அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார். இச்சம்பவமானது இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இவ்விரு நாடுகளிற்குமிடையில் ஏற்படவிருந்த பாரிய மோதல் ஒன்றிற்கான சந்தர்ப்பமாக அமைந்திருக்கலாம் என மேலும் அவர் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் போர் விமானத்தை தாக்காமைக்கான காரணத்தை அவர் தெரிவிக்கவில்லை.

## சிறுவர் தொழிலாளர்களாகும் அகதிச் சிறுவர்கள்

லெபனான்

சிரியாவில் இடம்பெற்றுவரும் போரைத் தொடர்ந்து, அங்கிருந்து லெபனானுக்குத் தப்பிச் சென்றுள்ள குடும்பங்களிலுள்ள சிறுவர்கள், சிறுவர் ஊழியர்களாக மாற்றப்படுவதாக, அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. அதேபோல, வளர்ந்தவர்கள், கட்டாயப் படுத்தப்பட்டு ஊழியர்களாக மாற்றப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அடிமைத் தனத்துக்கு எதிரான சர்வதேச முன்னெடுப்பான சுதந்திர நிதியம் என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே, இவ்விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிரியாவிலிருந்து ஏறத்தாழ ஒரு மில்லியன் அகதிகள், லெபனானுக்குச் சென்றுள்ளதாகவும், அவர்களில் பலருக்கு, அங்கு பணிபுரிவதற்கான உரிமை கிடையாது எனவும் தெரிவிக்கிறது. பிச்சை எடுத்தல், பூக்களை விற்றல், சப்பாத்துகளைச் சுத்தப்படுத்துதல், கார்க் கண்ணாடிகளைச் சுத்தஞ்செய்தல், ஏனைய தொழில்களிலும் பணியாற்றுவதாக அறிவிக்கப்படுகிறது.

## விமான விபத்தில் 12வர் பலி

பப்புவா நியூ கினியா



பப்புவா நியூ கினியாவின் கியுங்கா விமானநிலையம் அருகே இடம்பெற்ற விமான விபத்தில் 12 பேர் பலியாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்த விபத்தின் போது விமானி உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அதில் 3 சிறுவர்கள் அடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, குறித்த விமான விபத்தில் பலியாகிய விமானி அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகின்றது. இயந்திரக்கோளாறே குறித்த விபத்திற்கான காரணமென முதல்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத மருந்து பாவனையால் அதிகரித்த உயிரிழப்புக்கள்

பிரித்தானியா

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாண வரலாற்றில் முதல் முறையாக கடந்த 3 மாதங்களில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட மருந்துக்களை அளவுக்கதிகமாக சாப்பிட்ட 201 நோயாளிகள் உயிரிழந்துள்ளதை தொடர்ந்து அங்கு சுகாதாரத் துறை அதிகாரிகள் அவசரநிலையை பிரகடனப்படுத்தியுள்ளனர்.

இதுகுறித்து மருத்துவ அதிகாரி பேசியபோது, 'உயிரிழந்தவர்களில் 64 பேர் Fentany என்ற வலி நிவாரணி மாத்திரையை சாப்பிட்டதால் உயிரிழந்துள்ளதாக' தெரிவித்துள்ளார். இதே நிலை நீடித்தால் இந்த ஆண்டு இறுதிக்குள் 700 முதல் 800 பேர் வரை உயிரிழக்க வாய்ப்புள்ளது. இந்த அபாயம் குறித்து பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தினாலும், உயிரிழக்கும் நோயாளிகளின் எண்ணிக்கை குறையவில்லை என்பதால் தற்போது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது குறித்த பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## முகம் சுழிக்கும் மகாராணி

பிரித்தானியா





இந்தியா மற்றும் பூட்டான் நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக இளவரசி கேட் மிடில்டன் ஒரு கிழமைக்கு அணிய வேண்டிய ஆடைகள் இந்தியா மற்றும் பூட்டானில் வடிவமைக்கப்பட்டு லண்டனில் உள்ள அரண்மனைக்கு அனுப்பப்பட்டது. பின்னர், ஆடைகளை பார்த்து தனது விருப்பத்திற்கு மாற்றம் செய்து கேட் மிடில்டன் அணிந்து கொள்ள மீண்டும் வடிவமைக்-கப்பட்டது.

இந்த ஆடைகளை தான் இந்தியா மற்றும் பூட்டான் நாடுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இளவரசி அணிந்துள்ளார். ஆனாலும் இளவரசி அணிந்திருந்த ஸ்கர்ட் ஆடை காற்றில் அடிக்கடி மேல் நோக்கி எழுந்து இளவரசியின் கால்கள் தெரிந்தது தற்போது மகாராணியை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளதாம்.

## "அகதிகள் கட்டாயம் மொழியைக் கற்க வேண்டும்"

ஜேர்மன்

ஜேர்மன் சான்சலரான ஏஞ்சலா மெர்க்கல் தன்னுடைய ஆளும் கூட்டணி கட்சி தலைவர்களுடன் பெர்லினில் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் ஜேர்மனியில் குடியேறியுள்ள அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்பது பற்றி ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆலோசனை கூட்டத்தை தொடர்ந்து, அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் ஜேர்மன் மொழியை கற்றுக்கொள்ளாவிட்டால் அவர்களுக்கு நிரந்தர குடியிருப்பு அனுமதி வழங்க கூடாது என்பதற்கு அனைத்து தலைவர்களும் ஒப்புதல் அளித்துள்ளனர்.

அதேசமயம், புகலிடத்திற்காக காத்திருக்கும் வெளிநாட்டினர்கள் அரசாங்கம் உருவாக்கும் சுமார் 1,00,000 வேலை வாய்ப்புகள் மற்றும் இதர சலுகைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் மேலும் சில கட்டுப்பாடுகளை விதிக்கவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இவற்றை மீறுபவர்கள் மீது கடுமையான தண்டனை விதிக்கப்படும். எனவும் இவை அனைத்தையும் செயல்படுத்த ஒரு புதிய சட்டத்தையும் நடைமுறைப்படுத்த உள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.



## பதவி விலகினார் போக்குவரத்து அமைச்சர்

பெல்ஜியம்



கடந்த மார்ச் மாதம் 22ம் திகதி பிரசல்ஸ் நகரின் செவென்டெம் சர்வதேச விமான நிலையம் மற்றும் புகையிரத நிலையத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து விமான நிலைய பாதுகாப்பு குறைவு காரணமாக பெல்ஜிய போக்குவரத்து அமைச்சர் ஜாக்குலின் கலான்ட் பதவி விலகியுள்ளார். இத்தாக்குதல் பாதுகாப்பு குறைவு காரணமாகவே ஏற்பட்டதாகவும் இது குறித்து அமைச்சர் அவதானம் செலுத்தவில்லை எனவும் அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்தே அவர் பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஐ.எஸ் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இத் தற்கொலை குண்டு தாக்குதலில் 32பேர் உயிரிழந்ததுடன் அநேகமானோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## தோல்வியில் முடிந்த முயற்சி

வடகொரியா

வடகொரியா நேற்றைய தினம் மேற்கொண்ட ஏவுகணை சோதனை தோல்வியடைந்துள்ளதாக தென் கொரியா தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியவற்றின் எதிர்ப்பு, கடும் எச்சரிக்கையையும் மீறி வடகொரிய அதிபர் கிம் ஜோங் யுன் பல்வேறு அத்துமீறல்களில் ஈடுபட்டு வருகின்றார். அதேவேளை ஏவுகணையை கண்டறியும் கருவியை தென்கொரிய இராணுவம் கடலில் பொருத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்மூலமே வடகொரியா ஏவிய ஏவுகணை தோல்வியில் முடிந்துள்ளதாக தெரிவிக்கப்-பட்டுள்ளது.

## பொருளாதாரத்தில் வீழ்ச்சி

கனடா

கனடாவின் பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டிலும் எதிர்வரும் ஆண்டிலும் எதிர்பார்க்கப்பட்ட அளவினை விடவும் குறைவாக இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. எனினும் 2015 ஆம் ஆண்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவினை விட நடப்பாண்டு மற்றும் எதிர்வரும் ஆண்டுக்கான வளர்ச்சிவீதம் அதிகம் என்பது சுட்டிக் காட்டத்தக்கது. சக்தி வளத்துறையில் எற்பட்ட பின்னடைவு காரணமாகவே இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தற்போது காணப்படும் போட்டித்தன்மை எதிர்வரும் ஆண்டில் மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும் சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....



➡ வித்தியா சாகரன்




இந்த இடத்தில் ஒரு விடயத்தை நாம் நினைவுக்கு கொண்டுவர கடமைப்பட்டுள்ளோம்.
ஏனென்றால் வியட்நாமுடன் நாமும் தொடர்புபட்டுள்ளதால். தமிழரின் போராட்ட பாதையில் ஹோசிமின் மற்றும் வியட்நாம் விடுதலைப் போராட்ட வழி மிகப்பெரும் வழிகாட்டியாக இருந்தது மறுக்க முடியாது. ஹோசிமின் அடிக்கடி நினைவுகூரவும் பட்டிருந்தார். வியட்காங் போரியல் நுணுக்கங்கள் தமிழரின் போரியல் கல்விக்குள் பரீட்சித்துப் பார்த்து சேர்க்கப் பட்டிருந்தது.
நாமும் எமது விடுதலையை தேடி நடந்தவர்கள் தான். எமக்குள்ளும் அற்புதமான தன்னிகரற்ற வீரங்கள், தியாகங்கள் இருக்கின்றனதான். எமது போராட்ட நியாயங்கள் இன்றைய வியட்நாமுக்கும் தெரிந்திருக்கிறதுதான். 2009 இல் இலங்கையில் சிங்களப் பேரினவாதம் அரங்கேற்றிய அந்த போர்க்குற்றங்களை ஐ.நா மனித உரிமைகள் உலக அரங்கில் முன்னிறுத்தி நியாயம் கேட்ட பொழுது, தமது கடந்தகாலங்கள், தியாகங்கள் எல்லாவற்றையும் மறந்து, இலங்கை அரசுக்குத் துணை நின்றது இந்த வியட்நாம். அதற்குப் பின்னாலும் சீனா என்கிற ஒரு சக்தி இருந்தது வெளிப்படை. ஆக, என்னதான் சுதந்திரத்தை 1975 இல் வியட்நாம் அடைந்தாலும், இன்னும் முதுகெலும்பில்லாத நாடாகத்தான் இருக்கிறது போல.! இதற்காகத்தான் அன்றே எமது முன்னோர்கள் சொல்லிவைத்தார்கள் "நக்குண்டான் நாவிழந்தான்" என்று. இது பொய்யில்லை உறவுகளே.
ஒப்பிட்டுப் பார்க்கையில், உலகின் அனைத்து விடுதலைப் போராட்டங்களும், சுதந்திரப் போர்களும் நடைபெற்ற பொழுது, பின்னால் ஏதோ சில நாடுகள் துணை நிற்கும். ஆனால் தோல்வியே வந்த பொழுதும் யார் பக்கமும் சாயாமல், யார் உதவியும் இன்றி, தனித்து தனிச் சக்தியாக உருவெடுத்து, சொந்த மக்களின் பங்களிப்பில் கடந்த தமிழருக்கான போராட்டம் நடந்தது கண்கூடு. அனைத்தும் வரலாறுகள் சொல்லித் தந்த பாடங்கள்தான். எப்பக்கமும் சாயாமல் நடுநிலைமையில் நின்று நடப்பது எவ்வளவு பெரிய கடினமான செயல் என்பதை நின்று பார்த்தவர்கள் உணர்ந்தே இருப்பார்கள்.
இந்த இடத்தில் ஒரு விடயத்தை பார்த்து அமேரிக்கா பக்கம் திரும்பலாம். இது ஒரு புரிந்து கொள்ள முடியாத ஒரு விடயம். நாம் அடிக்கடி எமது நாட்டில் காணுகின்ற அனுபவித்த விடயம். அதிகம் உங்களைக் குழப்பவில்லை. அதாவது இந்த புத்த துறவிகளும் அரசியலும் பற்றியதுதான். என்ன? என்று பார்க்கிறீர்களா?

எமது நாட்டில் இவர்கள் போட்டு படுத்தும் பாடு நாம் கண்முன்னால் காண்பதுதான். பௌத்தம், பற்றற்ற வாழ்க்கையை இந்த உலகுக்கு போதிக்கிறது. உலகில் வாழும் அதிகமானோர் எந்த மத்ததை பின்பற்றினாலும் பௌத்த வழியை பின்பற்றுவதுண்டு. இன்று மேற்குலகம் பௌத்தத்தை அதிகம் உள்வாங்கி கொண்டிருக்கிறது என்பது பொய்யில்லை. இலங்கை அரசியலை தீர்மானிக்கும் மையமாக இந்த பௌத்த துறவிகளும், அவர்கள் சார்ந்த மடங்களும் கொண்டிருக்கிறது. இன்று நேற்றல்ல, பௌத்தம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட காலம் தொட்டு இலங்கை அரசியலோடு பின்னிப் பிணைந்தே வந்திருக்கிறது.
அதே போலத்தான் இந்த வியட்நாமிலும். பெரும்பான்மை பௌத்த வழியை பின்பற்றும் வியட்நாமியர்களது தேச விடுதலைப் போராட்டத்தை ஆசிர்வதித்து ஒளியூட்டியவர்கள் இந்த துறவிகள். வியட்நாம் பௌத்த துறவிகள் ஆயுதம் தரிக்கவில்லையே தவிர, அதனிலும் கூரிய ஆயுதத்தை தம்முடலில் சுமந்து நடந்தவர்கள் இந்த பௌத்த துறவிகள்.
"தீ" என்கிற ஆயுதத்தை ஏற்றுக் கொண்டார்கள். என்ன? அதிகம் குழப்புறேனா?
வியட்நாம் போர் வீச்சுக் கொண்ட 70 களின் பின்னர், அமெரிக்க வல்லாதிக்கத்தை எதிர்த்து இந்த துறவிகள், தமக்குத்தாமே தம்முடலில் தீ மூட்டிக் கொண்டு, ஆடாமல் அசையாமல் நின்ற இடத்திலேயே எரிந்து சாம்பல் ஆனார்கள்.

காத்திருங்கள் ...


## நிகழ்வுகள்

## மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் கட்டிட திறப்பு விழா

⇨ சேனையூர் நிருபர்

மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் புதிய நிர்வாகக் கட்டட திறப்புவிழா கடந்த வெள்ளிக் கிழமை (08.04) அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.ஏ.முபாறக் மதனி, அபிவிருத்திக்கும் பயிற்சிக்குமான சர்வதேச கலாசார மையத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எஸ்.எல்.நவ்பர் மதனி, சமூக சேவையாளர் எச்.எல்.எம்.நியாஸ் ஹாஜி ஆகியோர் கலந்துகொண்டு புதிய நிர்வாகக் கட்டடத்தை திறந்து வைத்தனர்.

இதன்போது நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் ஸ்தாபகர்களின் பெயர் விபரம் அடங்கிய படிகம் ஒன்றும் நத்வதுல் உலமா அரபுக் கல்லூரியின் வரலாற்றைக் கூறும் படிகம் ஒன்றும் திரை நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## எண்ணெய்க் காப்பும் கும்பாபிஷேகமும்

➡ கதிரவன்

திருகோணமலை ஏகாம்பரம் வீதி பத்தாம் குறிச்சி சீராளம்மன் ஆலயத்தின் எண்ணெய் காப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை 10.04.2016 நடைபெற்றது. மறுநாள் திங்கட்கிழமை அவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் இடம்பெற்றது. தொடர்ந்து விசேட பூசைகளும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இத்தினங்களில் ஆலயத்திற்கு அடியார்கள் பலர் கலந்து கொண்டு எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவத்தில் கலந்து கொண்டதுடன் அம்பாளின் இஷ்டசித்திகளையும் பெற்றுக் கொண்டனர்.





## சின்னம் அணிவிப்பு நிகழ்வு

➡ முள்ளிப்பொத்தானை நிருபர்

கந்தளாய் வலயக் கல்விப் பிரிவுக்கு உட்பட்ட கந்தளாவ ஆரம்ப பாடசாலையில் மாணவ தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு கடந்த 06-04-2016 கந்தளாவெவ ஆரம்ப பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக கிழக்கு மாகாண கிழக்கு மாகாண காணி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலபதி மற்றும் கிழக்கு மாகண சபை உறுப்பினர் Dr.அருன சிரிசேன அவர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

அத்துடன் அவர்கள் மாணவர்களுக்கு சின்னம் அனிவித்து வைத்தனர். சின்னம் அணிவிப்பை தொடர்ந்து உரையாற்றிய மாகாண சபை உறுப்பினர் அருன சிரிசேன பாடசாலை நிலவும் குறைகளை இனங் கண்டு விரைவில் தீர்த்து தருவேன் என பாடசாலை நிர்வாகம் மற்றும் பெற்றார் மாணவர்களிடமும் வாக்குறுதியழித்தார்.





## தீர்த்தோற்சவம்

➡ சேனையூர் நிருபர்

வரலாற்று சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்த உற்சவம் பாபநாச தீர்த்த சுனையில் 09.04.2016 சனிக்கிழமை காலை இடம்பெற்றது. இதன் போது மாதுமை அம்பாள் சமேத கோணநாதர் எழுந்தருளினார். தீர்த்த உற்சவத்திற்கான கிரியைகள் இடம்பெற்றன. பக்தர்கள் தம் பாவங்களை போக்கிக் கொள்ளும் நோக்கில் பக்தியோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூரியகாந்தி

மழைக்காலம் வந்துவிட்டால்
மனதிலோ பட்டாம்பூச்சி
மன்னவன் மடியிலோ
கிடந்திட ஓர் ஆசை ....

நித்தமும் காண்பவரை
மாரி காலம் வந்துவிட்டால்
காணமுடியாத ஏக்கம்
என்னுள்ளே எத்தனையோ நாட்களாய்....

தினமும் உன்னை காண்பதற்காய்
பனியில் குளிர்த்து
மஞ்சள் பொடி பூசி என் இதழ்
விரிந்து காத்திருக்கின்றேன் உனக்காக....

என்னவரைக் கண்டவுடன்
எழுந்திடும் ஆசைகளோ ஏராளம்
நீ சுற்றித் திரியும் திசையெல்லாம்
நானும் உன்னை சுற்றி வருவேன் எந்நாளும்....

உன் வருகையை எண்ணி எண்ணி
தவிக்கிறது என் உள்ளம்
என்றாவது ஒருநாள் திரும்பி பார்ப்பாயா
என்னை - உன் மீது
ஒரு தலையாய் காதல் கொண்ட என்னை ........



வே.மேனுகா
வரோதயாநகர்

## புதுவருடமே!!

எஸ்.கலாநேசன்
நீதிமன்ற வீதி, திருகோணமலை

சொந்த நிலங்களை பெற கூட
எத்தனை ஆர்ப்பாட்டங்கள்
அடியத்திவாரம் மட்டுமே காணும்
காணி நிலபுலாங்கள்
புது அரசியலமைப்பு சீர்திருத்தம்
முழுமையான நிறைவாகுமா?
புதுவருடப் பிறப்பே - புது வாழ்வை
எங்களிடம் தந்திடுவாயா?




## அலசும்!

- - தாமரைத்தீவான் - -
[ஈச்சந்தீவு, கிண்ணியா]

நானும் பிறந்தேன்,
நடந்தே படித்தேன்!
கான் - குளம் - கண்டல்
கடல் - வயல் கண்டேன்!

உடன் பிறந்தோரை
உதறித் தனித்தேன்!
கடன் இனுமுளதால்
கரை கண்டிலனே!

போமிடம் அறியேன்,
புறப்படவுள்ளேன்!
ஆமதன் பின்னர் .....?
அறிந்தவர் இல்லை!

இறை பற் றுடையார்
எதையெலாம் சொலினும்,
அறைபவை யாவும்
அலசும் ஆ றறிவே!

## இனியவளே

கருப்பாயி கருப்பாயி
கன்னம் கறுத்த கருப்பாயி

உன்னை தேடி வந்தேன்
ஓடி வர மாட்டாயா

வண்ணச் சேலை கட்டி
வடிவான பொட்டுக்காரி

சின்ன இடையழகி
சீக்கிரமா வாடியம்மா

தென்னம் தோட்டத்திலே
தெருவெல்லாம் சுற்றி வந்து

இன்பமாய் காத்திருப்பேன்
இனியவளே வாடியம்மா....

சீ.என். துரைராஜா
திருகோணமலை

## சிதறிப்போனவர்களும் சிதறு தேங்காய்களும்



அத்துமீறல்களையும்
அநியாயங்களையும்
மனிதாபிமானமென மொழிபெயர்த்து
இறுதிப் போரில்
அவலங்களைச் சுமந்த
அப்பாவிகளின் சிரசு கொய்து
'போர்' தேங்காயடித்து
வெற்றிவாகை சூடிக்களித்த
சாத்தான்கள்
காளிக்கும் கணபதிக்கு
சிதறு தேங்காயடித்து
மீண்டெழும் ஒரு வெற்றிக்காய்
சிரசாசனம் செய்கின்றன!

கையூட்டுக் கொடுத்தும் வாங்கியும்
காரியங்களைச் சாதித்த
இவர்களின் பழக்கதோஷம்
இந்துக் கடவுள்களையும்
சந்திக்கழைத்து சி்க்க வைத்து
சாதிக்கப்பார்ப்பது
வேடிக்கைதான்!

ஷெல்லிதாசன்

ஆனைவிலை ஆகிப்போன
தேங்காயை
வாங்கும் திறனற்ற பஞ்சைகள்
சொட்டுக்களை அரைத்துப் போட்டு
ஆணம் காய்ச்சி உண்ண
இலட்சக்கணக்காய் அதைவாங்கி
எடுத்தெறிந்து உடைத்து
கடவுளருக்கு காணிக்கை செலுத்தும்
காட்டேரிகள்
கனங்களின் மீட்புக்காய் இதுவென
பரப்புரை செய்வதை
தெய்வவாக்காக எண்ணும்
இலங்காபுத்திரர்கள்
அரைக்கரைவாசி இருக்கும் வரை
இவர்கள் காட்டில்
என்றும் அடைமழைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கண்ணாடியால் பார்க்கும் இலங்கைத் தமிழர் போராட்டம்

ஞானி

**"உலகத் தமிழினத் தலைவர் கலைஞர்" என்ற கனவைக் கலைத்தற்காக கருணாநிதியும் தி.மு.க.வும் பிரபாகரன் மீதும் விடுதலைப்புலிகள் மீதும் கொண்டி-ருந்த சினம் இன்னமும் ஆறவில்லை என்பதை தற்போதைய செய்திகள் உறுதிப்படுத்துகின்றன. கொடூர யுத்தத்தின் வலியிலிருந்து ஈழத் தமிழர்கள் மீள முடியாத தருணத்தில் யாழ்ப்பாணத்திற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தி.மு.க. எம்.பி டீ.ஆர் பாலு "உங்களுக்கும் தலைவர் கலைஞர் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்" என அறிவுறுத்-தினார். பிரபாகரன் என்ற பெயர் மீது தி.மு.க கொண்டிருந்த வெறுப்பு அந்த அறிவுறுத்தலில் தொனித்தது. பிரபாகரன் தொலைந்து போய் விட்டார்தானே இனிமேலாவது கலைஞரை உங்கள் தலைவராக ஏற்றால் என்ன என்று கேட்காமல் கேட்டார் டி .ஆர் பாலு.**



இலங்கை அரசியலும், இந்திய அரசியலும் வெவ்வேறானவை. ஒன்றுடன் ஒன்று ஒப்பிட முடியாதவை. பாணிகளும் வழிகளும் எதிர் எதிரானவை. இந்திய அரசியல் போலத்தான் இலங்கை அரசியலும் தமிழர் போராட்டங்களும் அமைந்திருக்கும் என்ற யூகங்களும் கற்பிதங்களும் முழுக்க முழுக்கத் தவறானவை. கருணாநிதியின் வாழ்க்கை திரைப்படமாகிறது என்ற செய்தி வெளியானதும் "ஒரு படத்தில் ஐந்து கதாநாயகிகளா?" என்று இணையத்தில் ஒருவர் கேள்வி கேட்டிருந்தார். தேர்தல் நடந்தால் முன்பக்கத்தில் கருணாநிதியின் மனைவி வாக்களிக்கிறார் என்று ஒருவரின் படம் பிரசுரமாகும். உள்பக்கத்தில் கருணாநிதியின் துணைவி வாக்களிக்கிறார் என்று வேறொருவரின் படம் வெளியாகும். இதெல்லாம் இந்தியப் பாணி. இந்திய வாக்காளர் இதனை ஏற்றுக்கொள்வார்கள். அது அவர்களது முடிவு. இத்தகைய தகுதிகள் இல்லாததாலோ என்னவோ வை.கோ போன்றவர்களைத் தமிழக வாக்காளர்கள் இன்னமும் ஏற்றுக்கொள்ள-வில்லை.

ஈழத்தின் நிலைமை வேறு மாதிரி. அங்கு தனிநபர் ஒழுக்கம் பிரதானமாக நோக்கப்படும். ஜி.ஜி.பொன்னம்பலம், செல்வநாயகம் காலமாயினும் அதற்கு முந்திய பிந்திய காலங்களிலும் தலைமைக்கான தகுதிகளில் இதுவே தேவை. புலிகள் காலத்தில் அரசியல் ரீதியாக அமிர்தலிங்கம், டக்ளஸ் போன்றோருடன் முரண்பாடு இருந்தது. இந்த மாபெரும் யுத்தத்தை நடத்திய சிங்களமும் கூட புலிகளின் ஒழுக்கம் குறித்துக் கொச்சைப் படுத்தியதில்லை. அவ்வாறு செய்தால் சிங்களவர்கள் கூட ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று தெரிந்திருந்தது.

தமிழகத்தின் தலைமைக்கான கண்ணாடியைப் போட்டுப் பார்த்ததாலோ என்னவோ சிவகாமி ஐ.ஏ.எஸ். என்பவர் "போராட்டத்துக்காகச் சென்ற பெண்களைப் புலிகள் தமது பாலியல் தேவைகளுக்காகப் பயன்படுத்தினர்" என்று கூறியுள்ளார். "புதியதலைமுறை" தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றிலேயே இவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இவரது கூற்றில் குளிர்ச்சியடைந்த கனிமொழியின் தந்தை இவருக்கு எதிர்வரும் தேர்தலில் தமது தலைமையிலான கூட்டணியில் பெரம்பலூர் தொகுதியில் தி.மு.க.சின்னமான உதய சூரியனில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்துள்ளார். இவரது கருத்தைக் கனிமொழியும் ஏற்றுக்கொண்டதாகத்தான் எண்ண வேண்டியுள்ளது. இல்லையேல் அவர் தமது ஆட்சேபனையைத் தெரிவித்திருப்பார்.

ஏற்கெனவே பார்வதியம்மாள் சென்னை விமானநிலையத்தில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டார். இதன் மூலம் பிரபாகரன் மீதான வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டார் கருணாநிதி. ஈழ விவகாரத்தில் உண்மைக்குப் புறம்பான-வற்றையே பேசுவதை வழக்கமாகக் கொண்டவர் அவர்."

ஜெயலலிதா முன்னர் எழுதிய கடிதத்தின் அடிப்படையிலேயே மத்திய அரசு அனுமதிக்க வில்லை" எனச் சமாதானம் சொன்னார். ஜெயலலிதா புலிகளை எதிர்த்த காலத்திலும் தனது கருத்தில் மூர்க்கமாக இருந்தவர். வழவழத்த நிலைப்பாடு கொண்டவரல்ல. ஜெயலலிதா கடிதம் எழுதிய காலத்தில் பா.ஜ.க. ஆட்சியில் இருந்தது. கருணாநிதி குடும்பத்தைச் சேர்ந்தவர் உட்பட மூன்று தி.மு.க வினர் அப்போது மத்திய அமைச்சர்களாக இருந்தனர். ஜெயலலிதாவின் கருத்தை நிராகரிக்கும் படி இவர்கள் ஏன் அமைச்சர-வையில் கூறவில்லை? தனது தவறுகளுக்கு மற்றவர்-களைப் பொறுப்பாளி யாக்குவதில் கருணநிதிக்கு நிகர் வேறு எவரும் இல்லை இதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருந்ததில்லை.

"காந்தளகம்" எனும் பதிப்பகத்தை நடத்தி வருபவர் மறவன் புலவு சச்சிதானந்தம் என்பவர். இவர் மீது, இலங்கைக்கு மருந்து அனுப்பச் சதி செய்தார் எனக் குற்றம் சாட்டி வழக்குத் தொடர்ந்தது கருணாநிதி அரசு. போதைப் பொருளைக் கடத்தினார் அல்லது பெறுமதியான பொருட்களைக் கடத்த சதி செய்தார் என்று குற்றம் சாட்டுவது என்பது வேறு ஆனால் மருந்துப் பொருட்களைக் கடத்தச் சதி செய்தார் என்பதுதான் உலகத் தமிழினத்தின் தலைவராகக் கனவு காணும் கருணாநிதியின் ஆட்சி சுமத்திய குற்றச் சாட்டு. மருந்துத் தடையால் உயிரிழக்கும் தமிழரின் உயிரைக் காப்பாற்றப் பலரும் சாத்தியமான வகையில் உதவினர். ஆனால் தனக்கு வாக்களிக்க முடியாத தமிழர் உயிரிழந்தால்தான் என்ன என்று கருதினார் கருணாநிதி.

இலங்கைத் தமிழரில் தேர்ந்தெடுக்கப் பட்டோரைத் தனியாகப் பிரித்து "சிறப்பு முகாம்" என்ற கொடுஞ்சிறையொன்றை ஆரம்பித்த வரலாறும் கருணாநிதிக்கே உண்டு. புலம்பெயர் நாடுகளில் குறிப்பிட்ட காலத்தின் பின் அந்நாட்டின் பிரசைகளாகத் தமிழர்களை ஏற்றுக்கொள்ளவதுண்டு பி.ஜே.பி அரசிலும், காங்கிரஸ் அரசாங்கத்திலும் மந்திரிப் பதவிகள் வகித்த தி.மு.க. வினால் முகாம்களில் இருக்கும் தமிழருக்கு இந்தியக் குடியுரிமையோ, இரட்டைக் குடியுரிமையோ பெற்றுக் கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மனமில்லாமல் போய்விட்டது.

இந்திய இராணுவத்தின் இலங்கைப் பிரசன்னத்தை எதிர்த்து வைக்கோவின் அழுத்தத்தால் கண்டன நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது தி.மு.க. அக்கால-கட்டத்தில் எம்.ஜி.ஆர் மறைந்தார். நன்றிக் கடனாகவும் எம்.ஜி.ஆருக்கு அஞ்சலி செலுத்து முகமாகவும் பிரபாகரனும் எம்.ஜி.ஆரும் ஒன்றாக இருக்கும் படங்களைத் தமிழகமெங்கும் சுவரொட்டி-களாக ஒட்டினர் புலிகள். இதனைக் கண்ணுற்றதும் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட கண்டன நடவடிக்கைகளை ரத்துச் செய்தார். கருணாநிதி. மறைந்த ஒருவருக்குச் செய்யும் அஞ்சலி நடவடிக்கைகளில் கூட அரசியல் லாப நட்டக் கணக்குப் பார்ப்பவர் அவர். அவரைப் பொறுத்தவரை தான் கூப்பிட்டால் வரும் நாய்க் குட்டிகளாகப் புலிகள் இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது.

முதன் முதலாகப் புலிகள் முதல்வர் எம்.ஜி.ஆரைச் சந்திக்க இருக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்ததும், அந்தச் சந்திப்புக்கு முதல் நாள் தன்னைச் சந்திக்க வேண்டுமென்றார். எம்.ஜி.ஆருடைய சந்திப்புக்கான திகதி பல நாட்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டது. இந்நிலை-யில் தமிழக அரசியல் விளையாட்டுக்குள் பகடைக் காய்களாகத் தம்மைப் பயன்படு-த்துவதைப் பிரபாகரன் விரும்பவில்லை. ஆகவே முதல்வருடனான சந்திப்புக்கு பிறகு ஒரு நாளில் சந்திக்கலாம் எனத் தகவல் அனுப்பினார். இதனை ஜீரணிப்பது கருணாநிதிக்குச் சிரமமாக இருந்தது. புலிகள், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களுக்கும் கொடுக்க விருந்த தலா இருபத்தையாயிரம் ரூபாவில் புலிகளுக்கு என ஒதுக்கிய இருபத்தையா-யிரத்தை டெலோ இயக்கத்துக்கு வழங்குவதாக அறிவித்தார். இதற்கு ஒரு காரணம் இருந்தது.

1980 களில் இலங்கைத் தமிழர் நலனின் ஒட்டுமொத்தக் குத்தகைக் காரர் தான்தான் என்ற மாதிரி பிம்பத்தை உருவாக்க அவர் முயற்சித்தார். எம்.ஜி.ஆர் மலையாளி என மறைமுகமாகவும் சுட்டிக் காட்டுவார். அதனால் தான் இலங்கைத் தமிழர் நலனுக்கு போதிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்றும் குற்றம் சாட்ட முயற்சித்தார். பொறுமையிழந்த எம்.ஜி.ஆர், "கருணாநிதி தனது ஆட்சிக்காலத்தில் குட்டி மணியை ஸ்ரீ லங்கா காவல்துறையினரிடம் ஒப்படைத்தவர் தானே" என்று கேட்டார். இதனால் வெல வெலத்தார் கருணாநிதி .

அக்காலகட்டத்தில் ரெலோவில் ராசப்பிள்ளை, ஸ்ரீ சபாரத்தினம், ஒபரோய் தேவன் (வறுவா) சின்ன வறுவா, சுதன், சாரதி(ரமேஷ்), முரளி, ரூபன், செல்வம் (ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தின் தற்போதைய குழுக்களின் பிரதித்தலைவர்) உட்பட பன்னிரண்டு போராளிகளே இருந்தனர். ராசப்பிள்ளை தலைவராக இருந்தாலும் சில காரணங்களால் நடைமுறையில் ஸ்ரீசபாரத்தினத்தின் செல்வாக்கே அங்கு மேலோங்கி இருந்தது. ஆகையால் ஸ்ரீ சபாரத்தினத்தைத் தொடர்பு கொண்ட தி.மு.க வினர் அவரது பெயரில் ஒரு அறிக்கையை வெளியிடச் செய்தனர். "தமிழீழ விடுதலை இயக்கம்" என்ற பெயரில் உத்தியோக பூர்வமாக வெளிவந்த முதலாவது அறிக்கை அதுதான். அதில் செயலதிபர் என்று ஸ்ரீ சபாரத்தினம் கையொப்பம் இட்டிருந்தார். "குட்டி மணியை ஸ்ரீலங்கா காவல்துறையிடம் ஒப்படைத்த போது அவர் ஒரு போராளி என்ற விடயம் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசுக்குத் தெரியாது" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறு தன்னைப் பெரும் இக்கட்டிலிருந்து காப்பாற்றிய ஸ்ரீ சபாரத்தினத்தின் மீது கருணாநிதிக்கு அபிமானம் இருந்தது. அதனை நிரூபிக்கும் வகையில் தான் சிறையிலிருந்த போது கதை - வசனம் எழுதிய "பாலைவன ரோஜாக்கள்" என்ற திரைப்படத்தின் (சத்தியராஜ், பிரபு நடித்தது) ஒரு கதாபாத்திரத்துக்கு சபாரத்தினம் எனப் பெயர் சூட்டினார்.

தி.மு.க. டெலோவுக்கு சார்பாக இருந்த போதும் வை.கோ, சுப்புலட்சுமி, ஜெகதீசன் போன்றோர் புலிகளுக்கு ஆதரவாக இருந்தனர். எனினும் தனது சொல் கேட்காத புலிகள் மீது கருணாநிதி கொண்டிருந்த வன்மம் மட்டும் அப்படியே இருந்தது. அதன் தொடர்ச்சியே சிறப்பு முகாம், பார்வதியம்மா ளுக்கு அனுமதி மறுப்பு, இறுதிப்போரில் ஸ்ரீலங்கா அரசுக்கு மறைமுக ஆதரவு, ஏழுபேரின் விடுதலையில் தசாவதார நடிப்பு என தொடர்ந்தது.

இப்போது உலகத்திலேயே ஒழுக்கம் மிக்க போராளி அமைப்பாக இருந்த புலிகளைக் கொச்சைப்படுத்திய சிவகாமி ஐ.எ.எஸ் க்கு உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடச் சந்தர்ப்பம்.


இலங்கைப் பிரச்சினைக்காக சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டு விலகியதாக கூறியதும் ஒரு நாடகமே. தி.மு.க உறுப்பினர்களின் மரணம் காரணமாக நடைபெறும் இடைத்தேர்தல்களில் அ.தி.மு.க வேட்பாளர்களே வெற்றி பெற்று எதிர்க்கட்சித் தலைமை கூடப் பறிபோகும் சூழ்லில் தான் இவர் ராஜினாமா செய்தார். அடுத்த எதிர்க்கட்சித் தலைவராக - கருணாநிதிக்கு மாற்றாக தி.மு.க வில் ஒருவர் உருவாகி விட்டார் என்ற நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே அன்பழகனையும் ராஜினாமா செய்ய வைத்தார். இருவரும் ராஜினாமா செய்ததும் காங்கிரஸ் எதிர்க்கட்சி யாகிவிட்டது.

சிவகாமி ஐ.எ.எஸ் போட்டியிடும் தொகுதியில் வை.கோவோ, சீமானோ திருமாவளவனோ வீரலட்சுமியோ, போட்டியிடப் போவதில்லை. எல்லோரும் தத்தமக்குச் சாதகமான தொகுதியில்தான் போட்டியிடப் போகின்றனர். கூடா நட்பு கேடாய் முடியும் என்று குறிப்பிட்ட கருணாநிதி இன்னமும் எழுவரின் விடுதலையை எதிர்க்கும் காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்திருக்கிறார். இது இந்திய அரசியல். எனினும் கட்சிக்குள் தமது பரம்பரை உரிமையை தக்க வைக்கத் தடையாக இருந்த வைக்கோவை அகற்ற அல்லது அகலவைக்க புலிகளின் மீது பழியைப் போட்ட கருணாநிதியின் செயல் குள்ளத்தனமானது.

தி.மு.க வில் முன்னர் தீப்பொறி ஆறுமுகம் என்றொரு பேச்சாளர் இருந்தார். அவர் தனது பேச்சை ஆரம்பிக்க முன்னர் "எனது உரையை தொடங்க முன்னர் இங்குள்ள பெண்களை வெளியேறுமாறு கேட்டுக் கொள்கிறேன் ஏனெனில் எனது பேச்சு அப்படி இப்படி இருக்கும்" என முன்னுரையாகக் குறிப்பிடுவார். அதற்கு ஏற்றவாறு பேச்சும் விரசமாகவும் நாகரிகமில்லாமலும் இருக்கும்.

இவ்வாறன கட்சியுடன் கூட்டச் சேர்ந்ததாலோ என்னவோ சிவகாமி ஐ.ஏ.எஸ். கருத்து தீப்பொறி ஆறுமுகத்தின் பாணியில் உள்ளது . "வாழும் வள்ளுவர்" போல காதலி, மனைவி, அடுத்த மனைவி, துணைவி என்று "நல்லறத்தில்" ஈடு படாமல் கணிசமான புலிகள் உறுப்பின-ர்கள் தமது வாழ்க்கைத் துணையை பெண் உறுப்பினர்களில் இருந்து தேர்ந்தெடுத்து ஒருவரோடு ஒருவர் மட்டும் உறவு கொண்டு வாழ்க்கை நடத்தியது இவர் எதிர் பார்க்கும் பண்பாட்டுக்கு விரோதமாக இருக்கலாம். இவரது கருத்தை கி.வீரமணி, சுபவீரபாண்டியன், போன்றோர் கூட ஆட்சேபிக்கவில்லை.

**எத்தனையோ ஏமாற்றங்களை சந்தித்த ஈழத் தமிழினத்துக்கு இது ஒன்றும் புதிதல்ல.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வியல் 100



(வி.என்.சந்திரகாந்தி)

## சமூக நோக்கு

எம்மில் பலரிடம் அருகிக் காணப்படும் ஒரு மனப்பாங்கு சமூகம் பற்றிய சிந்தனை அல்லது நோக்கு. நாம் கவலைப்படுவதெல்லாம் பெற்றோர், பிள்ளைகள், கணவன் மனைவி, சகோதர சகோதரி என்கின்ற எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகின்றது. ஊர் உலகம் பற்றிய சிந்தனை அறவே கிடையாது.

உண்மையில் சமூக நோக்குடன் வாழ்ந்தவர்களே பெரும் தலைவர்களாக உருவாகியிருக்கின்றார்கள். மனித குல வரலாற்றில் சரித்திரம் படைத்த ஒவ்வொருவருமே சமூக நோக்கை முன்னிறுத்தி வாழ்ந்தவர்களே . அவர்கள் தம்மை பற்றியோ தமது பெற்றோர் மனைவி பிள்ளைகள் பற்றியோ கவலைப்பட்டதில்லை. அவர்களுடைய சிந்தனை முழுவதும் நலிவடைந்த சமூகத்தை பற்றியதாகவே இருந்தது.



எமது முழு சிந்தனையும் எம்மை பற்றியதாகவே இருக்கும். அதன் பின்னர் மனைவி பிள்ளைகள். இந்நாட்களில் பலர் பெற்றோரைக்கூட வயோதிபர் இல்லங்களில் சேர்த்துவிட்டு "ஹாயாக" இருக்க துணிந்து விட்டார்கள். காலையில் எழுந்ததும் முன்பெல்லாம் புதினப்பத்திரிகை படிப்பது போல இப்போ பலர் முகநூலில் தான் துயிலெழுந்து விழிக்கின்றார்கள். 'வாட்ஸ் அப்', 'ருவிட்டர்', 'யூரியூப்' ஆகியவற்றில் ஆர்வம் வந்து விட்டது!

சொல்லப்போனால் புதினங்களை அறிவதில் தான் எமது ஆர்வம் அதிகரித்துள்ளது. எங்கே கொள்ளை சம்பவங்கள் நடந்துள்ளன? சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்களா? இவைபற்றி அறிவதிலேயே எமக்கு நாட்டம் அதிகம் இருக்கும். எமது அயல் வீட்டில்தான் கொள்ளை நடந்திருக்கவும் கூடும். பெண்கள் பிள்ளைகள் கூக்குரல் இட்டு அழுது குளறியிருப்பார்கள். நாம் எமது வீட்டில் மின்விளக்கு ஏதாவது எரிந்துகொண்டிருந்தால் கூட அதனையும் அணைத்துவிட்டு குழந்தைகள் பிள்ளைகள் யாராவது இருந்தால் அவர்களை வெருட்டி அழுது குரல் காட்டவேண்டாம் என்று எச்சரித்தும் விட்டு பாதுகாப்பாக இருந்து விடுவோம்! அயல் வீட்டுக்காரனுக்கு எது நடந்தால் எமக்கென்ன என்கின்ற மனோபாவம்!

இனி, பாலியல் வல்லுறவு சம்மந்தப்பட்ட செய்திகள் படங்களை தவிர்த்து யாராவது முகநூல் பார்க்கின்றார்களா? அச்சம்பவங்களை பெயருக்கு மற்றவர்கள் முன் சாடுவதை தவிர எதிர்த்து நடவடிக்கையில் இறங்கும் தீரம் கிடையாது. எங்கே... சம்பந்தப்பட்ட பெண்ணின் பெற்றோரை சந்தித்து நீதிமன்ற விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க யாராவது தயாரா? இல்லை! ஆனால் நீதிமன்ற விசாரணைகள் பற்றி முகநூலில் தொடர்ந்து வரும் செய்திகளை வாசிக்க தவறுவதில்லை!

இனி அரச அதிகாரிகள் பலர் மக்களின் சேவையை முன்னிட்டு சம்பளம் வழங்கி நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவ்வகையில் காவல்துறையினர், நீதிவான்கள், சட்டத்தரணிகள், ஆகியோரின் சேவைகள் மிக மிக அத்தியாவசியமானது. சம்பளத்திற்காக அல்லாமல் சமூக நோக்குடன் பணிபுரிபவர்களால் தான் பாதிப்புக்குள்ளானோருக்கு அதிகளவு சேவை செய்ய முடியும். .

சமூக நோக்குடன் சேவையில் ஈடுபடும் காவல்துறையினரால் தான் குற்ற செயல்கள் நடைபெறாமல் தடுக்க முடியும். காவல் நிலைய பதிவேடுகள் எங்கெங்கு எவ்வகையான குற்றச் சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதை விலாவாரியாக வெளிப்படுத்தும். அப்பிரதேசங்களை அவர்கள் தமது கண்காணிப்பின் கீழ் வைத்திருக்க வேண்டும். இரவு நேரங்களில் நடந்தும் துவிச்சக்கர வண்டிகளிலும் வாகனங்களிலும் ரோந்து போக வேண்டும். இரவு பத்து மணிக்கு பின்னரும் அதிகாலை நான்கு மணிக்கு முன்னருமான நேரத்தில் பயணிக்கும் வாகனங்களை மறித்து சோதனையிட வேண்டும்.

ஒரு இடத்தில் களவு, சண்டை, ஆட்கடத்தல் நிகழ்வது பற்றி தொலைபேசி மூலம் அழைப்பு வந்தால் காலம் தாழ்த்தாது அந்த இடங்களை சுற்றிவளைக்க வேண்டும். அப்படி செய்தால் நாளாவட்டத்தில் குற்ற செயல்களில் ஈடுபடுவோர் பயந்து ஒதுங்குவர்.

குற்றவாளிகள் எப்போதும் தமக்கு சார்பாக காவல்துறையினரைத் திருப்புவதற்கு அரசியல் செல்வாக்கை பயன்படுத்த முனைவர். அதே போன்று பணத்தை அள்ளி வீசவும் முன் வருவர். உண்மையான சமூக நோக்கு உள்ள காவல்துறை அதிகாரி அவற்றிற்-கெல்லாம் அடிபணிய மாட்டார்.

அடுத்து நீதிவான்கள் நடுவு நிலைமையுடனும் வழக்கை நீடிக்க விடாமலும் விசாரணைகளுக்கான திகதிகளை முன்வைக்கவேண்டும். அண்மையில் கொடுரமாக நடந்தேறிய ஒரு வல்லுறவுச் சம்பவம் சார்ந்த மரபணு பரிசோதனை அறிக்கை ஒரு வருட காலம் முற்றுப்பெற்ற நிலையிலும் சமர்ப்பிக்கப்படவில்லை. இது தொடர்பாக காவல்துறையினரை மட்டும் விசாரித்துக் கொண்டிருக்காமல். மரபணு பரிசோதனை நடாத்தும் நிறுவனத்துடனும் நேரடியாக தொடர்பு கொண்டு அறிக்கையை பெறவேண்டியது கட்டாயமல்லவா? இந்த விடயத்தில் நீதிவான்களுக்கு முழு அதிகாரம் இருக்கும் என்றே மக்கள் நம்புவர்.!

அடுத்து சட்டத்தரணிகள் தாம் வாதாட பொறுப்பெடுக்கும் வழக்குகளை சமூக நோக்குடன் அவதானித்து பாரம் எடுப்பது நல்லது. குற்றவாளிகள் எப்போதும் தாம் தப்புவதற்காக பெருமளவான பணத்தை வழங்க முன்வருவார். சட்டத்தரணிகள் உண்மையை வெளிக்கொணர்வதற்காக வழக்காளி பக்கமும் எதிராளி தரப்பிலும் வாதாடுவதில் தப்பு இல்லை. அதிலும் கட்டாயம் சமூக நோக்கு இருக்க வேண்டும். ஒரு குற்றச் செயலுக்கு பொது மக்களின் கண்கண்ட சாட்சியம் வெளிப்படையாக இருக்கும்போது, எதிராளி தரப்பில் வாதாடும் சில சட்டத்தரணிகள் பாதிப்புக்குள்ளானோரின் துன்ப துயரங்களை பொருட்படுத்தாது பொய் ஆதாரங்களையும் தடயங்களையும் முன்வைத்து வழக்கை உடைப்பதானது சமூக நோக்கற்ற செயல் என்றே கருத வேண்டும்.

இனி சமூகத்திற்கு அதிக அளவில் சேவையாற்ற கூடியவர்கள். அரசியல் வாதிகள் ஆவர். பல நாடுகளில் தன்னலமற்ற அரசியல் வாதிகள் மக்களுக்கும் நாட்டுக்கும் பெரும் சேவையாற்றி பெயர் பெற்றிருக்கின்றார்கள். எமது நாட்டில் அரசியல் வாதிகள் மக்களால் தெரிவுசெய்யப்படுகின்றார்கள். அரசியல் வாதிகளுக்கு என்று கல்வித்தகைமை எதுவும் விதிக்கப்படவில்லை. அவர்கள் சமூக நோக்கு உடையவர்களா என்பதை தீர்மானிக்கும் சரியான சக்தி எதுவும் கிடையாது. எமது நாட்டின் மக்களில் பெரும்பான்மையானோர் குறைந்த கல்வியறிவுடன் காணப்படுகின்றார்கள். அவர்களை மதம் மொழி என்று பூச்சாண்டி காட்டி எவர் சார்பாகவும் எக்கட்சியின் பொருட்டும் திசை திருப்ப முடியும்...! பணம் மது ஆகியவற்றிற்கு விலை போகின்றவர்களும் பல பேர் இருக்கவே செய்கின்றனர்.

இக்காரணிகளே எம் நாட்டில் சமூக நோக்குடனான அரசியல்வாதிகள் தோன்றாமைக்கு காரணங்களாகும்.

அண்மையில் மூன்றாம் உலக மகாயுத்தம் ஏற்படக்கூடிய சாத்தியம் இருக்கின்றதா என்று இணையத்தில் தேடிப்-பார்த்தேன்... மதம் சார்ந்த கோஷங்களே மற்றொரு உலக மகா யுத்தத்திற்கு தூபமிடப்போதுமானது என கருத்துரைக்-கப்பட்டிருந்தது.

எமது நாட்டிலும் சமூக நோக்கு அப்படித்தான் மதம் காரணமாக பாழ்பட்டுக்கிடக்கின்றது.

பெரும்பான்மையான அரசியல் வாதிகள் பணம் சம்பாதிப்பதை நோக்கமாக கொண்டே பாராளுமன்றத்திற்கு வந்திருக்கின்றார்கள். அமைச்சு பதவிகளுக்கு அடிபடுகின்றார்கள். 2016 மாசி 07ம் திகதியன்று புதிய அரசாங்கத்தின் கீழ் நிதி குற்ற புலனாய்பு பிரிவு அமைக்கபட்டுள்ளது. பல முன்னாள் அரசியல் வாதிகள் நிதி சார்ந்த மோசடிகளை முன்னிட்டு இங்கு விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவது இணையத்திலும் பத்திரிக்கைகளிலும் பரபரப்பு செய்தியாக பிரசுரமாகின்றது. பல நாடுகளில் உள்ள வங்கிகளில் அவர்கள் பணம் வைப்பு செய்துள்ளமை வெளிச்சத்திற்கு வந்துள்ளன.

இனி அரசியல் வாதிகளுக்கு மேலதிகமாக பல அரசியல் கட்சிகள் எம்நாட்டில் இருக்கின்றன. அவற்றினது சமூக நோக்கு பெரும் கவலையளிப்பதாகவே உள்ளது. பெரும்பான்மையான கட்சிகள் சிறுபான்மை இனங்களை நசுக்கும் நோக்கையே தமது இலட்சியமாக கொண்டுள்ளன.

அமெரிக்க அரசியலை சற்று எடுத்து நோக்குங்கள். அங்கு ஒரு அரசியல் கட்சி மக்களின் சமூக நோக்கு மீது நம்பிக்கை வைத்து பராக் ஓபாமா என்ற கறுப்பு இனத்தவரை தமது ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தியது. அமெரிக்க மக்களும் பரந்த சமூக நோக்குடன், ஜனாதிபதியாக வருவதற்கு அவருக்குள்ள தகுதியை கருத்தில் கொண்டு வாக்களித்தனர். அவரும் வெற்றி பெற்றார்! இன்று அமெரிக்காவை தூக்கி எறிந்துவிட்டு அரசியல் நடத்தும் தைரியம் உலகில் முன்னணி வகிக்கும் எந்த நாட்டுக்கும் கிடையாது. அமெரிக்கா என்கின்ற ஜனநாயக நாடு அவரது தலைமைத்துவத்தின் கீழ் வெற்றி நடை போடுகின்றது!

சமூக நோக்கு என்பதன் பலம் எப்படியானது என்பதை எமது அரசியல் வாதிகள் என்று உணர்வார்களோ அன்றுதான் எமது நாட்டுக்கு விடிவு கிட்டும்!



# விநோதங்கள்

## யாராலும் அணிய முடியாத திருமண ஆடை



பிரித்தானியாவில் திருமணம் உள்ளிட்ட வைபவங்களுக்கு கேக் தயாரித்து வழங்கி வருபவர் விருதுகள் பல பெற்ற சில்வியா எல்பா. இவர் தற்போது வடிவமைத்துள்ள 170 சென்றி மீற்றர் உயரம் கொண்ட திருமண உடை வடிவிலான கேக் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இதற்காக சில்வியா எல்பா தமது சிறப்பு குழுவினருடன் இணைந்து 300 மணி நேரம் செலவிட்டு இந்த 70 கிலோ எடை கொண்ட திருமண உடை கேக்கினை வடிவமைத்துள்ளார்.
இந்த விசேட கேக்கனது லண்டன் மாநரில் நடைபெறவிருக்கும் இரண்டு நாள் சர்வதேச கேக் கண்காட்சியில் இடம்பெற உள்ளதாக சில்வியா தெரிவித்துள்ளார்.

## சொந்த பெயரால் ஏற்பட்ட சிக்கல்

மேற்கு பிரான்ஸில் Marion(27) என்ற ஏழை இளம்பெண் பல மாதங்களாக போராடி ஒரு தனியார் நிறுவனத்தில் 'வணிக உதவி பயிற்சியாளராக' பணியில் சேர்ந்துள்ளார். இந்த இளம்பெண் பணிபுரிந்த இதே அலுவலகத்தில் மற்றொரு பெண்ணும் Marion என்ற அதே பெயரில் மற்றொரு துறையில் பணிபுரிந்து வந்துள்ளார். இந்நிலையில், வாடிக்கையாளர்கள் இந்த இரண்டு பெண்களின் ஒரே பெயரால் குழப்பம் அடைவதாக அந்த அலுவலகத்தின் உரிமையாளருக்கு புகார் செய்ததை தொடர்ந்து, உரிமையாளர், 'ஒன்று பெயரை மாற்று......அல்லது இந்த அலுவலகத்தை விட்டு போய்விடு' என கூறியுள்ளார்.
பல மாதங்கள் போராடி கிடைத்த வேலை என்றாலும் கூட தனது பெயர் தான் முக்கியம் எனக் கருதி அந்த வேலையை தூக்கி எறிந்துவிட்டு அலுவலகத்தை விட்டு வெளியேறியுள்ளார் அப்பெண்.

## என்ன கொடுமை! இறந்தும் நிம்மதி இல்லை

உலகின் மிக உயரமான மனிதர்களில் ஒருவரான 38 வயதான தாமஸ் கடுமையான மாரடைப்பு காரணமாக தூக்கத்திலேயே மரணமடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இவரது உயரம் காரணமாக சவப்பெட்டி தயார் செய்வது முதல் எரியூட்டுவது வரை சடங்கிற்கு தேவையான அனைத்தும் முடிவு செய்வதில் குடும்பத்தினர் திணறியுள்ளனர். இவர் 7 அடி 4 அங்குலம் உயரம் கொண்ட தாமசுக்கு திரைப்பட வாய்ப்பு கிடைப்பது எளிதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதேபோல் பிரான்ஸ் நாட்டில் 115 கிலோ எடையும், 5 அடி 11 அங்குளம் உயரம் உள்ள ஒருவர் இறந்ததை அடுத்து அவருக்கு சராசரி சவப்பெட்டியை விடுத்து பிரத்யோகமாக பெரிய அளவில் ஒரு சவப்பெட்டி தயாரிக்கப்பட்டது. எனினும் கல்லறை அமைந்திருந்த வாசல் வழியாக அந்த சவப்பெட்டியை நுழைக்க முடியாமல் தடுமாறிய அவர்கள் எரியூட்டுவதிலும் சிக்கலை சந்தித்தமையினால் கல்லறைக்கு வெளியே சில மீற்றர்கள் தொலைவில் நிலத்தை தோண்டி அங்கேயே சடலத்தை புதைத்துவிட்டு சென்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## விமர்சனம்
### ஹலோ நான் பேய் பேசுறேன்

நடிகர்: வைபவ்
நடிகை: ஐஸ்வர்யா ராஜேஷ்
இசை: சித்தார்த் விபின்
ஒலிப்பதிவு: எஸ்.பாலமுருகன்
இயக்குனர்: பாஸ்கர்

அடுத்த வார இதழில்



## திரை விமர்சனம் "தெறி"

நடிகர்: விஜய்
நடிகை: சமந்தா, எமி ஜாக்சன்
இசை: ஜி.வி.பிரகாஷ்
இயக்குனர்: அட்லீ
ஒலிப்பதிவு: ஜார்ஜ் வில்லியம்ஸ்

கேரளாவில் தன் குழந்தை நைனிகாவுடன் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருபவர் விஜய். பேக்கரி கடை நடத்தி வரும் இவர் எந்த வம்புக்கும் போவதில்லை. அதே பேக்கிரியில் விஜய்க்கு, அசிஸ்டெண்டாக பணிபுரிந்து வருகிறார் மொட்டை ராஜேந்திரன். இன்னொரு புறம் நைனிகா படிக்கும் பள்ளியில் டீச்சராக வரும் எமி ஜாக்சனுக்கு, விஜய் மீது ஒருதலைக் காதல்.



மொத்தத்தில் 'தெறி' எட்டுத்திக்கும் தெறிக்கும்...

இந்நிலையில் இவருக்கு ஒரு நாள் லோக்கல் ரவுடி ரூபத்தில் பிரச்சனை வர போலீஸ் நிலையம் செல்லும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதுநாள் வரை சாதுவாக இருந்த ஜோசப்புக்கு வேறு ஒரு முகம் இருப்பது தெரிய வருகிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பு என்று விரியும் பிளாஸ்பேக்கில், விஜய் சென்னையில் அநியாயங்களை எல்லாம் தட்டிக்கேட்கும் நேர்மையான அதிகாரியாக வலம் வருகிறார். குற்றச்செயல் புரிந்த அமைச்சர் மகனை போலீஸ் அதிகாரி விஜய் தண்டிக்கிறார். அதனால் பிரச்சினைகளில் சிக்கி குடும்பத்தை இழக்கிறார். அதற்குப் பிறகும் விரட்டும் வில்லன் கும்பலை விஜய் என்ன செய்கிறார்? வில்லன்கள் என்ன ஆகிறார்கள்? விஜய் மீண்டும் பழைய நிலைக்கு வந்தாரா? என்பது மீதிக் கதை.


கெத்தான போலீஸ் அதிகாரி, அன்பான அப்பா, பாசமான மகன், பிரியமான காதலன் என்று அனைத்திலும் தெறிக்க விட்டுள்ளார். விஜய் அறிமுகம் ஆகும் காட்சியில் தொடங்கி, அவர் ஒவ்வொரு காட்சியிலும் அவரது ஸ்டைலைப் பார்த்து தியேட்டரில் ரசிகர்கள் போடும் விசில் சத்தம் காதை பிளக்கிறது. மகேந்திரன், நடிப்பிலும் தான் ஒரு லெஜண்ட் என நிருபித்திருக்கிறார்.

### 24 படத்தின் ஓப்பனிங் வசூலுக்கு செக் வைக்கும் மற்றொரு படம்

சூர்யா நடிப்பில் 24 படம் மே மாதம் 6ம் தேதி ரிலிஸாகவுள்ளது. இப்படம் கண்டிப்பாக ஹிட் அடிக்க வேண்டும் என்று சூர்யா ரசிகர்கள் காத்திருக்கின்றனர்.ஏனெனில் இதற்கு முன் வந்த அஞ்சான், மாஸ் தோல்வியடைந்ததால், எப்படியாவது இப்படம் வசூல் சாதனை படைக்க வேண்டும் என்று படக்குழு மற்றும் ரசிகர்கள் எண்ணுகின்றனர். ஆனால், அன்றைய நாளில் தான் சிம்பு நடிக்கும் இது நம்ம ஆளு படமும் வருவதாக கூறப்படுகின்றது. அப்படி இந்த படம் வந்தால் 24 வசூலுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

### எப்படி இத்தனை அடி கட் அவுட் விழுந்தது?

இளைய தளபதி நடித்த தெறி படம் இன்று தமிழகத்தில் பிரமாண்டமாக வெளிவந்தது. இப்படத்தை ரசிகர்கள் பேனர், போஸ்டர், கட் அவுட் என திரையரங்கையே திருவிழா போல் ஆக்கிவிட்டனர்.இந்நிலையில் நெல்லை ராம் சினிமாஸ் திரையரங்கில் 140 அடி கட் அவுட் வைக்கப்பட்டது. இந்த கட் அவுட்டிற்கு காலையிலேயே பால் அபிஷேகம் செய்து ரசிகர்கள் கொண்டாடினர்.ஆனால், தற்போது இந்த கட் அவுட் சரிந்தது பெரும் அதிர்ச்சியை கிளப்பியுள்ளது. வேகமாக வீசப்பட்ட காற்றால் தான் இவை விழுந்ததாக திரையரங்கு தரப்பு விளக்கம் அளித்துள்ளது.



### நான் காப்பி அடிக்கிறேனா? அட்லீ ஓபன் டாக்

ராஜா ராணி என்ற மெகா ஹிட் படத்தை கொடுத்தவர் அட்லீ. இவர் இயக்கத்தில் நேற்று வெளிவந்த தெறி வசூல் வேட்டை நடத்தி வருகின்றது.அட்லீ, ராஜா ராணி படத்தை மௌன ராகம் பார்த்து அப்படியே எடுத்து விட்டார், தெறி படமும் சத்ரீயன் படத்தின் தழுவல் தான் என கூறப்பட்டது.இதுக்குறித்து அட்லீ ஒரு பேட்டியில் தமிழகத்தில் உள்ள அனைத்து குடும்பங்களிலும் பொதுவாக ஒரு விஷயம் இருக்கும், அதை மாற்றவே முடியாது, அதை தான் நான் படமாக எடுக்கிறேன்.அது ஒரு சிலருக்கு காப்பி என்று தெரியலாம், அதுப்பற்றி கவலையில்லை, மணிரத்னம் போன்ற உயர்ந்த இயக்குனருடன் என்னை ஒப்பிடுவது [illegible] மகிழ்ச்சி தான் என கூறியுள்ளார்.

### பேயாக மாறிய நயன்தாரா

நயன்தாரா தற்போது இருமுகன் படப்பிடிப்பில் பிஸியாகவுள்ளார். இப்படத்தை தொடர்ந்து அறிமுக இயக்குனர் ஒருவர் இயக்கத்தில் நடிக்கவுள்ளார்.இப்படம் மாயா படத்தை போன்றே ஹீரோயினுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் படமாம். இதுமட்டுமின்றி இதில் நயன்தாரா பேயாக நடிக்க விருக்கின்றாராம். இப்படத்தை சற்குணம் தயாரிக்க, தற்போதைக்கு டிக் டிக் டிக் என தலைப்பு வைத்துள்ளார்கள் என கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

OTHER

## பரம்பரை அலகை மாற்றியமைக்கும் கணினி மொழி கண்டுபிடிப்பு


இன்றைய உலகில் கணினியை தொடர்புபடுத்தும் தொழில்நுட்பமானது அசுர வளர்ச்சி கண்டு வருகின்றது. அதேபோன்றே கணினியை பயன்படுத்தி பல்வேறு செயல்பாடுகளையும் மேற்கொள்வதற்கு தனித்துவம் வாய்ந்த பல கணினிமொழிகள் காணப்படுகின்றன. இவற்றின் வரிசையில் தற்போது உயிர்க் கலங்களை ஹேக் செய்து அதில் உள்ளபரம்பரை அலகுகளில் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய புதிய கணினி மொழியினை MIT - Massachusetts Institute of Technology ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். எழுத்து வடிவிலான இந்த கணினி மொழியானது DNA இலுள்ள தகவல்களை என்கோட் செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது. இதன் மூலம் பக்டீரியா மற்றும் வைரஸ் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றினால் ஏற்படும் நோய்த் தாக்கங்களை தவிர்ப்பதுடன், மனித தேவைகளுக்கு சாதகமான முறையில் பயன்படுத்த முடியும் எனவும் குறித்த ஆராய்ச்சியாளர் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.



MOBILE

## இதோ அறிமுகமாகின்றது மிக மெலிதான ப்ளூடூத் கீபோர்ட்

தொழில்நுட்பத்தின் அபரிமிதமான வளர்ச்சியினால் இன்று அனைத்து தொழில்நுட்ப சாதனங்களும் அளவில் சிறியதாகிக்கொண்டே செல்கின்றன. இது தவிர பெருமளவான சாதனங்கள் வயர் இணைப்பு அற்ற நிலையிலே செயற்படுத்தக்கூடியதாகவும் மாற்றப்பட்டுள்ளன. இவற்றின் தொடர்ச்சியாகவே வயர்லெஸ் மவுஸ், கீபோர்ட் என்பனவும் அறிமுகம் செய்யப்பட்டன. ஆனால் தற்போது மிகவும் மெல்லிய தோற்றம் கொண்டதும், ப்ளூடூத் வயர்லெஸ் தொழில்நுட்பத்தில் செயற்படக்கூடியதுமான கீபோர்ட் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. றுநமநல எனும் இப் புதிய கீபோர்ட் ஆனது 6 மில்லி மீற்றர்கள் மட்டுமே தடிப்பினைக் கொண்டதாகவும், 95 கிராம் எடை கொண்டதாகவும் வடிவமைக்கப் பட்டுள்ளது. ஸ்மார்ட் கைப்பேசி, டேப்லட் என்பவற்றுடனும் இணைத்துப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் இந்த கீபோர்ட்டின் விலையனது 58 டொலர்கள் ஆகும்.



## இடியுடன் கூடிய கனத்த மழை: சொல்கிறது சூப்பர் "குடை"

இடியுடன் கூடிய பலத்த மழை பெய்யும்என வானிலை மையம் தெரிவித்து தான் இதுவரை கேட்டிருப்போம். ஆனால், தற்போது மழை வரவிருப்பதைகாட்டிக்கொடுக்கும் குடை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. பிரான்சில் உள்ள வெஸ்ஸூ என்ற நிறுவனம்வடிவமைத்துள்ளுள்ள இந்த குடைக்கு "ஊம்ப்ரெல்லா" என்று பெயர். ஸ்மார்ட் போனில் அப்ளிகேஷனை டவுன்லோட் செய்துகொண்டு, ஊம்ப்ரெல்லாவை இயக்க வேண்டும். வானிலை மாற்றங்கள் மட்டுமின்றி, வீட்டிலோ, வெளியிலோ குடையை மறந்து வைத்துவிட்டு வருவதைக்கூடஜிபிஎஸ் தொழில்நுட்பம் மூலம் குடை இருக்கும் இடத்தை நமக்கு ஆப் காட்டிக் கொடுத்துவிடும்.



இந்த குடை இரண்டு வகைகளில் கிடைக்கின்றன.

3.1 அடி உயரம் கொண்ட வளைந்த கைப்பிடி கொண்ட குடை க்ளாஸிக்.

0.8 அடி உயரம் கொண்ட நேரான கைப்பிடி கொண்ட குடை மொடர்ன்.

இந்தக் குடையைச் சிறிய வானிலை மையம் என்கிறார்கள். குடையில் இருக்கும் சென்சார்கள் நேரம், வெளிச்சம், ஈரப்பதம், அழுத்தம், வெப்பநிலை பாேன்றவற்றைப் பதிவு செய்து, அடுத்து அரை மணி நேரத்தில் என்ன நடக்க இருக்கிறது என்பதைச் சொல்லிவிடுகிறது. வானிலைக்கு ஏற்ப இந்தக் குடையின் வண்ணங்களும் மாறிக்கொண்டே இருக்கும். இதுதான் ஊம்ப்ரெல்லாவின் தனிச் சிறப்பு என்று வடிவமைப்பாளர் அலெக்சாண்டர் தெரிவித்துள்ளார்.

## உடல் இயக்கமற்றவர்களுக்கு உதவும் அதி நவீன சாதனம்

நரம்புகளில் ஏற்படும் கோளாறுகளின் விளைவாக உடல் அங்கங்கள் இயக்கமின்றி செயலிழந்து போகும் தருணங்கள் (Paralysed ) ஏற்படுவதுண்டு. இவ்வாறான தாக்கத்திலிருந்து விடுபடுவதற்குரிய மருத்துவ சிகிச்சைகள் அரிதாகவே காணப்படுவதுடன் அவை 100 சதவீதம் வெற்றியளிப்பதும் சந்தேகமே. இந்நிலையில் தற்போது நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட NeuroLife எனும் சாதனத்தினைப் பயன்படுத்தி 24 வயதான இளைஞனின் செயலிழந்து போயிருந்து கைகளை இயக்கி சாதனை படைக்கப்பட்டுள்ளது. இச் சாதனத்தின் துணையுடன் பொருட்களை பிடித்து எடுத்தல், கிரடிட் கார்ட்டினை முறையாக பயன்படுத்துதல், கிட்டார் வாசித்தல், திரவங்களை கையாளுதல் என பல்வேறு செயற்பாடுகளையும் குறித்த இளைஞனால் மேற்கொள்ள முடிகின்றது. இதனை ஒஹியோ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




## டொயோட்டா நிறுவனத்தின் நவீன ரக வாகனம் தொடர்பான தகவல் வெளியானது

வாகன உற்பத்தியில் உலக மக்களின் நன்நம்பிக்கையை வென்றதும், ஜப்பானை தளமாகக் கொண்டு இயங்கும் நிறுவனமுமான டொயோட்டா Ubox எனும் நவீன ரக வாகனம் ஒன்றினை வடிவமைக்கவுள்ளது. இதன் வடிவம் உட்பட இதற்கான தொழில்நுட்ப கட்டமைப்பு என்பவற்றினை அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள ஊடநஅழளழ பல்கலைக் கழகத்தின் சர்வதேச மத்திய நிலையத்தை சேர்ந்த மாணவர்கள் வடிவமைத்துள்ளனர். இவ் வாகனமானது கார்களின் அடுத்த தலைமுறையாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த வாகனத்தின் வடிவம், மற்றும் தொழில்நுட்பத்தினை விளக்கும் வீடியோ ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.



## மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிமுகம் செய்த விண்டோஸ் 10 இயங்குதளம்

மைக்ரோசொப்ட் நிறுவனம் இறுதியாக அறிமுகம் செய்த விண்டோஸ் 10 இயங்குதளம் உட்பட அதற்கு முன்னர் அறிமுகம் செய்யப்பட்ட விண்டோஸ் 8 இயங்குதளங்களிலும் நீல நிறத்தில் திரை தோன்றி (Blue Screen of Death) சில பிரச்சினைகளை எடுத்துக்காட்டும். இதனால் விண்டோஸ் இயங்குதளத்தினை மீளவும் இன்ஸ்டால் செய்யும் நிலை ஏற்படும். ஆனால் இதனை இலகுவாக நிவர்த்தி செய்வதற்காக மேலதிக தகவல்களை பெறும்பொருட்டு குறித்த நீல நிற திரை தோன்றும்போதே அதில் இணைத்தள முகவரி ஒன்று (URL), QR குறியீடு என்பனவும் தோன்றும்.




இவ் இணைய முகவரியினை நேரடியாக பயன்படுத்தியோ அல்லது ஸ்மார்ட் கைப்பேசிகளின் ஊடாக ஞச குறியீட்டினை ஸ்கான் செய்தோ குறித்த இணையத்தளத்திற்கு சென்று அப்பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொள்ள முடியும்.

## பணம் அனுப்பணுமா? இனி பேஸ்புக்கே போதும்

சமூக வலைத்தளங்களில் நம்பர் 1 என்றால் அது பேஸ்புக் தான். தினம் தினம் புதிய வசதிகளை அறிமுகப்படுத்தி வரும் பேஸ்புக் தற்போது மெசஞ்சர் ஆப் வழியாக மொபைல் பண பரிவர்த்தனை சேவையை தொடங்கியுள்ளது. டெபிட் கார்டு இருந்தாலே போதுமானது, எவ்வித கட்டணமும் இன்றி இலவசமாக இந்த சேவையை பயன்படுத்தலாம். தற்போது அமெரிக்காவில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வரும் இந்த வசதி விரைவில் மற்ற நாடுகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. நமது டெபிட் கார்டு பற்றிய தகவல்களை மெசஞ்சர் அப்ளிகேஷனில் சேர்த்த பின்பு Paypal போன்றே Electronic Money Transfer வசதி இதிலும் தரப்பட்டுள்ளது. பயனாளர்களின் டெபிட் கார்டு பற்றி விவரங்களை பாதுகாப்பதற்காக 'Pin Based Password' பாதுகாப்பும் தரப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணமானவனின் மனது

சஞ்சயன் செல்வமாணிக்கம்

## கட்டிப்புழு வைத்தியம்

வாழ்வு எனக்கு பல அருமையான மனிதர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறது. இனம், மொழி, மதம், நாடு என்று நாம் வேறுபட்டிருந்தாலும் அனைவரும் வாழ்க்கையுடன் போராடும் மனிதர்கள் என்பதும், சக மனிதனை நேசிப்பவர்கள் என்பது மட்டுமே எமக்கிடையில் உள்ள ஒற்றுமை. வலிகளை பகிரும்போது எம்மையறியாது ஒரு ஆறுதல் எமக்குள், ஊருக்குள் ஊடுருவும் பனிபோல் மெதுவாய் எம்மையறியாது எம்மை சுற்றிக்கொள்கிறது, பனிக்காலத்து குளிரில் போர்வையின் வெம்மை போன்ற சுகத்தை தருபவை அவை. நானும் பலரிடம் எனது வலிகளைப் பகிர்ந்திருக்கிறேன். அதேபோல் பலரும் என்னிடத்தில் தங்கள் வலிகளை பகிர்ந்திருக்கிறார்கள்.

முதன் முதலில் என்னுடன் தன் இரகசியத்தை பகிர்ந்துகொண்டவர் யார் என்று நினைத்துப்பார்க்கிறேன். அது 1970 இறுதிக்காலங்களில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் விடுதி நண்பனாய் இருக்கவேண்டும். பெற்றோர் மீதான ஏக்கமும், வீடும், பசியும், அவனது கிராமமும் அவனை பாடாய்படுத்திய ஒரு மாலைப்பொழுதில் நாம் ஒழிந்து பிடித்துவிளையாடிய பொழுதில், நாளை நான் விடுதியில் இருந்து மாணதலைவர் களின் அடாவடியான கட்டுப்பாடுகளாலும், பசியின் காரணமாகவும் தப்பி ஓடப்போகிறேன் என்றான் அவன். எனக்கு நா வரண்டுபோனது. அவன் பிடிபட்டால் அவனது கதி என்னவாகும் என்று எனக்கு நன்கு தெரிந்தே இருந்தது.

எங்கள் பேராசான் பிரின்ஸ் காசிநாதரின் அரசாட்சி நடந்துகொண்டிருந்த காலம் அது. ஒழுக்கம் என்பதைத்தவிர வேறு எதையும் பேசாத கடும் கண்டிப்புள்ள மனிதர் அவர். அவரின் கட்டளையின் கீழ் இயங்கும் மாணவதலைவர்களை கடந்து இவன் எப்படி தப்பி ஓடப்போகிறான் என்று சிந்தித்து பயந்துகொண்டதை எல்லாம் பொய்யாக்கி அடுத்தநாள் காலை மாயமாய் மறைந்திருந்தான் அவன். அன்று அவனது இரகசியத்தை காத்ததால், அவன் மீண்டும் விடுதிக்கு திரும்பியபின் அவனுக்கு நெருங்கிய நண்பனாய் மாறியிருந்தேன்.

இதன் பின், பால்யத்து தோழர்களின் சில்மிசங்கள், என்னுடன் இணைந்து காட்டுப்பகுதியில் உட்கார்ந்திருந்து 20 கோல்ட்லீப் சிகரட்டுக்களை ஊதித்தள்ளிய தோழன், இந்துப் பெண்ணை ஒரு தலையாய் காதலித்த இஸ்லாமிய நண்பன் என்று தொடங்கி, சென்னையின் மொட்டைமாடிகளில், பம்பாய் நகரத்து வீடு ஒன்றில், நோர்வேயில் பலபாகங்களிலும், எனது "அந்தரத்தில் உறைந்துபோன மழைத்துளி" பதிவினை 'வாசித்துவிட்டு உரையாடுகையில் தன்வாழ்வின் வலிபற்றி பேசிய முன்பின் அறியாத பெண்வரை என் மனதுக்குள் பலரின் இரகசியங்கள் உண்டு. ஏன் என்னிடத்தில் பலரும் தங்கள் மனதின் வலிகளைப் பகிர்கிறார்கள் என்று நான் நினைத்துப்பார்ப்பதுண்டு. சில கேள்விகளுக்கு பதில் கிடைக்காவிட்டால் மனம் மகிழும். அப்படியான கேள்விதான் அதுவும்.

என்னிடம் உள்ள கடும் முன்கோபம் எனது தந்தையுடையது. ஆனால் பலர் கூறும் "உன்னுடன் பேசுவது ஆறுதலானது" என்னும் வார்த்தையின் முழுப் பெருமையும் எனது தாயாருக்கே உரியது. அவரிடம் எத்தனையோ நல்ல பழக்கவழக்கங்கள் இருந்தாலும் நான் என்னையறியாமல் அவரிடம் இருந்து இதைமட்டுமாவது கற்றுக்கொண்டிருக்கிறேன் என்பது, பலமனிதர்களும் என்னுடன் உரையாடலாம் என்று கூறும்போது புரிகிறது.

அம்மா ஒரு வைத்தியர். அவரிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று பலர் பல மணிநேரங்கள் பயணம் செய்து வருவார்கள். எங்கள் வீட்டில் தங்கியிருந்து மறுநாள் பயணப்பட்டவர்களும் உண்டு. சிலர் வாரக்கணக்கில் வீட்டில் தங்கியிருந்து மருத்துவம் பெற்ற கதைகளும் உண்டு. அம்மா இவர்களிடம் பணம் வாங்கியதில்லை.

இப்போது அம்மா வைத்தியம் பார்ப்பதில்லை. சில வருடங்களுக்கு முன் ஏறாவூருக்கு அம்மாவை அழைத்துப் போயிருந்தேன். அம்மாவை அங்கு எல்லோருக்கும் "அம்மா" என்றால்தான் தெரியும். அம்மா ஏறாவூரில் தங்கியிருந்த சில மணிநேரங்களுக்குள் ஊருக்குள் அம்மா வந்திருக்கிறார் என்ற கதை பரவ அம்மாவை சந்திக்க பலரும் வந்த போதுதான் வாழ்க்கையில் பணத்தால் சம்பாதிக்கமுடியாத ஒன்றை அம்மா தனது அடக்கமான மனதாலும், அன்பான வார்த்தைகளினாலும், தன்னடக்கத்தினாலும் சம்பாதித்திருக்கிறார் என்பதை அறிந்துகொண்டேன்.

"செய்யது உம்மா" என்னும் பெயரில் அம்மாவை மிக நன்றாக அறிமுகமான ஒரு முதிய முஸ்லீம் பெண் இருக்கிறார். அம்மா என்றால் அவருக்கு அத்தனை பிடிப்பு. அம்மாவும் நான் ஏறாவூருக்கு செல்லும்போதெல்லாம் அவரை சந்தித்து அன்பைத் தெரிவி என்பார். அவரைச் சந்திக்கும் போதெல்லாம் இவர் தான் அம்மாவின் மகன், அம்மா என்னை பார்க்க மகனை அனுப்பியிருக்கிறார் என்று அனைவருக்கும் சொல்லியபடியே பெருமைப்படுவார். அம்மாவைப் பற்றி எப்போதும் பேசிக்கொண்டே இருப்பார் என்பார்கள் அவரது அயலவர்கள். அத்தனை மரியாதை. இத்தனைக்கும் அம்மா அவர்களுக்கு உறவினரோ, அயலவரோ, ஊரவரோ இல்லை.

தொடரும்

---

# மனமே அனைத்திற்கும் அடிப்படை

(தன்யா)




வேறுவழியின்றி ஹம்சா, இறுதி முடிவெடுத்தாள். அந்த வீட்டிலேயே குடியேற வேண்டிய நிலைக்கு ஆளானாள். மறுநாளே பால் காய்ச்சினாள். வீட்டிற்கான முற்பணம் கைமாற்றப்பட்டது.

**கடந்தவாரத் தொடர்ச்சி....**

ஒப்பந்தம் எழுதப்பட்டு அன்றே வீட்டில் குடியேறினாள். ஏற்றி இறக்கிய சாமான்கள் அப்படியே அதற்கதற்கான அறைகளில் வைக்கப்பட்டிருந்தது. தனக்கான ஒரு அறையையும் தெரிவு செய்திருந்தாள். மிகுந்த உடல் அசதியினால் நேரத்திற்கே இரவு ஆகாரத்தை எடுத்துக் கொண்டாள். உடன் படுக்கைக்குச் சென்றாள். மிகுந்த துணிவான அவளுக்குள் ஏற்கனவே பார்த்த பேய் மற்றும் ஆவி திரைப்படங்களின் விம்பங்கள் கண்திரை முன் வந்து போயின. அனைத்தையும் தட்டி விட்ட அவள் நித்திரை செய்ய முயன்றாள்.

நீர்க்குழாயிலிருந்து நீர் வடியும் சத்தம் கேட்டது. அனைத்து குழாய்களையும் சென்று பார்த்தாள். சமையலறை குழாய் சரியாக மூடப்படாமல் நீர் சொட்டிக் கொண்டிருந்தது. சரியாக பூட்டிவிட்டு வந்தாள்.

கண் மூட மறுத்தது. எழுந்து தனி ஒருவன் திரைப்படத்தை பார்வையிடத் தொடங்கினாள். சற்று நேரத்தில் படலையின் கொண்டியை யாரோ சட சட என அடித்தனர். தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தத்தை சத்தமின்றி (mute) செய்துவிட்டு கூர்ந்து கேட்டாள் சற்று நேரத்தில் யாரோ நடந்து செல்லும் அரவம் கேட்டது. மீண்டும் படத்தில் கருத்தை ஊன்ற முற்பட்டாள். அதற்கிடையில் தடார் என கூரை மீது ஏதோ விழுந்தது. "மாமரத்தில் இருந்து மாங்காய் விழுந்திருக்கும்" என தன்னை சமாதானம் செய்ய முற்பட்டாள். கூடவே, தானாக மாங்காய் விழுமா? எனும் கேள்வியும் எழுந்தது.

இவ்வாறு பயம் மேலிடும் சந்தர்ப்பத்தில் எல்லாம் தன் வலது மோதிர விரலால் விபூதி பூசுவது போல் கண்களை மூடி வெறும் விரலால் நெற்றியில் கீறுவது வழமை. அவ்வாறே செய்தாள். சற்று துணிவு எட்டிப் பார்த்தது.

பகல் நேரத்திலேயே இருட்டாக இருக்கும் அவ்வீடு இரவு இருட்டும் சேர்ந்து மிகவும் பயங்கரமான இருட்டாக காணப்பட்டது.

நேரம் தற்போது நள்ளிரவு 1.00 மணி. தனது தோள்பட்டையில் கை ஒன்று வைக்கப்பட்டது போல் உணர்ந்தாள் சட்டென திரும்பிப் பார்க்கவும் முடியாமல் திணறிப் போனாள். அது பார்த்தால், சோபாவில் சாய்ந்திருந்த போது சோபாவில் இருந்த துவாய் அவள் மீது விழுந்துள்ளது. தன்னை நினைத்து தானே சிரித்துவிட்டு படுக்க முற்பட்டாள்.

எப்போது விடிந்தது என்பது அவளுக்கே தெரியவில்லை. ஏனெனில் தன்னை அறியாமல் நித்திரையாகி இருந்தாள் ஹம்சா. கதவைத் திறந்து வெளியில் வந்தாள். மேல் வீட்டு தரம் ஒன்றில் கற்கும் அழகிய பெண் குழந்தை "அக்கா" என அழைத்து தன் அழகிய சிரிப்பை உதட்டில் தவழவிட்டாள்.

இருவருக்கும் இடையில் சம்பாஷணை ஆரம்பித்தது. அதில் முக்கிய விடயம் ஒன்றும் இவளுக்கு கிடைத்தது. அதாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது. வீதியில் ஜொக்குடன் நிற்கும் மனநிலை சரியில்லாத அந்த நபர் இரவிரவாக ஒவ்வொருவரினது வீட்டு படலையையும் தட்டுவது வழக்கம் எனவே படலையை இரவில் சாத்திவிடவும் என்பதே அது.

ஹம்சாவின் மனதிற்குள் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. அக்குழந்தையை உச்சி மோந்து முத்தமிட உள்ளம் துடித்தது. அதற்குள் அவளது தாயாரின் அழைப்பின் பேரில் அவள் விடைபெற்றுச் சென்றாள். தனது மடமையை உணர்ந்து கொண்டாள். இதற்குள் அவ்வாறெல்லாம் ஒன்றுமில்லை என்பதை அவள் ஆழ்மனது உணர்ந்து கொண்டது. தற்போது ஒரு மாதம் கடந்து விட்டிருந்தது.

எனினும் 'வாங்கிய டார்லிங் 2 படம் மேலுறை கூட அகற்றப்படாமல் அவ்வாறே கிடந்தது. நாளடைவில் இவளும் பயத்திற்கு அடிமையாகக் கூடும்.

முற்றும்

---

# கடற்றொழிலாளர்களும் அவர்தம் வாழ்க்கையின் சோகமும்

வாழ்வாதாரச் செயற்பாடுகளில் ஒன்றான மீனவத் தொழிலாளர்கள் நாளாந்தம் தொழில் ரீதியான இன்னல்களை பல ஆண்டு காலமாக அனுபவித்து வருகின்றனர். அதிலும் வெளி மாவட்டம் என்பது அயல் நாடு போல மாறிவிட்டது. இவ் விவகாரங்கள் இவர்கள் இரு பகுதியினரின் வாழ்நாளிலும் மிகவும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருவது அனைவரும் அறிந்த விடயமாகும்.

ஆனாலும் பலதரப்பட்ட அரச உயரதிகாரிகள் மட்டம் வரை சென்றுவிட்ட விடயமாக இருந்தும் கூட இன்னும் ஒரு முற்றுப் பெறாத விடயமாகவுள்ளது. மக்கள் மனங்களில் வேதனைகளில் சுமந்து நிற்கின்றது.

தற்காலத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்படுவதும் எம் நாட்டு மீனவர்கள் இந்திய இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொள்வதும் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றது. பின்னர் உயர் மட்ட பேச்சுவார்த்தையினை அடுத்து நிபந்தனையேதும் இன்றியும் நிபந்தனைகளின் பெயரிலும் விடுவிக்கப்படுவதும் வழமையான ஒன்றாக மாறியுள்ளது. இந்நிலைமை நீடிக்குமேயானால் நாளடைவில் இரு நாட்டு உறவுகளையும் பல கோணத்தில் பாதித்து விடும் ஓர் சிக்கல் நிலையினை தோற்று வித்துவிடலாம். எல்லைகளுக்கு கட்டுப்பட்டு தமது பகுதிகளில் மட்டும் நேர்மையாக தமது கடமைகளை நிறைவேற்றுவார்களேயானால் ஒருவித சிக்கல் நிலையும் ஏற்படாத துடன் தமது உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ளலாம். அத்துடன் இரு நாடுகள் மற்றும் இரு மாவட்டங்களுக்கிடையிலான பிணக்குகளையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

அரசாங்கத்தால் சில மீன்பிடி முறைகள் தடுக்கப்பட்டுள்ளது. இருப்பினும் தடைகளை மீறி சிலர் அம்முறைகளில் மீன்பிடித்து வருகின்றனர். இருப்பினும் அம்முறைகளினால் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படாது என மக்கள் தெரிவிக்கின்றனர். பாதுகாப்பு வலயம் மற்றும் கடற்படையினரின் எல்லை என கூறி பொது மக்கள் மீன்பிடி செய்யும் பல பரப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளது. இதனாலும் கூட மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இவ்வாறான தடைகளை விதிக்கும் அதிகாரிகள் சரியான முறையில் அவர்களுக்கான மாற்று நடவடிக்கையினை நிர்ணயித்துக் கொடுக்கும் கடமையில் இருந்து தவறிவிடுகின்றனர் என்பது கவலையளிப்பதாக உள்ளது.

இந்நிலைமைகள் நீண்டு போகும் நிலையை கருத்தில் கொண்டு மிக விரைவில் இவற்றிற்கான தீர்வு காணப்படல் வேண்டும் என்பது மக்களின் கருத்தாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் பொறியில் இருந்து தப்பிக்க சீனாவின் நிபந்தனைகளை ஏற்கும் சிறிலங்கா

www.puthinappalakai.net

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளாலும் வர்த்தக மற்றும் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் இந்திய மாக்கடலில் தனது இருப்பை நிலைப்படுத்துவதற்கு சீனாவிற்கு சிறிலங்கா தேவைப்படுகிறது.

இவ்வாறு, Voice Of America இணையத்தளத்தில், Saibal Dasgupta எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். புதினப்பலகைக்காக இதனை மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.

ஒரு ஆண்டுக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்ட, 1.4 பில்லியன் டொலர் பெறுமதியில் சீனாவின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான இணக்கப்பாட்டை சிறிலங்கா வழங்கியுள்ளது.

இத்திட்டம் மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வியாழனன்று சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சீனாவிற்கான பயணத்தை மேற்கொண்டிருந்த போது அறிவிக்கப்பட்டது. சிறிலங்காவின் இத்தீர்மானமானது மேலும் சீன முதலீடுகள் சிறிலங்காவிற்குள் உள்நுழைவதற்கும், இந்திய மாக்கடலை அடைய வேண்டும் என்கின்ற தனது இலக்கை நோக்கி சீனா நகர்வதற்குமான வாய்ப்பை வழங்கியுள்ளது.

சிறிலங்காவின் பிரதமர் சீனாவிற்கான தனது பயணத்தின் போது தொடருந்து, வீதி, துறைமுகம் மற்றும் விமானநிலையத் திட்டங்களை சீன நிறுவனங்கள் அமுல்படுத்துவது தொடர்பான உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க சிறிலங்காவின் பிரதமராகப் பதவியேற்ற கையோடு கடந்த ஆண்டு மார்ச் மாதம் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை நிறுத்துமாறு கட்டளையிட்டிருந்தார். இத்திட்டமானது சீனா மற்றும் சிறிலங்கா ஆகிய இரு நாடுகளுக்கும் மிகவும் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது.

'கொழும்பு நகரத் திட்டம் மீண்டும் தொடங்குவதற்கான உடன்பாடு எட்டப்பட்டுள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். இத்திட்டமானது மிகவும் உறுதியாக மேற்கொள்ளப்படுவதற்கு சிறிலங்காவுடன் கைகோர்த்துச் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்' என சீனப் பிரதமர் லீ கெகியாங் தெரிவித்துள்ளதானது கொழும்பு துறைமுக நகரத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான தீர்மானமானது எவ்வளவு முக்கியமானது என்பதை அடிக்கோடிட்டுக் காண்பிக்கிறது.

கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான தீர்மானத்தை சிறிலங்காவின் தலைவர் எட்டியதானது இந்த நாடு சீனாவின் கடன்பொறிக்குள் தள்ளப்படுவதைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாகும் என ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் சிறிலங்காவிற்கான கடன் தர மதிப்பீட்டை அனைத்துலக தர மதிப்பீட்டு நிறுவனங்களான Fitch மற்றும் Standard & Poor's ஆகியன குறைத்ததன் பின்னர் உலக சந்தையிலிருந்து தனக்கான நிதிகளைத் திரட்டிக்கொள்வதில் சிறிலங்கா பல்வேறு கடினங்களை எதிர்நோக்கி வருகிறது.


சிறிலங்காவானது சீனாவால் வழங்கப்பட்ட 8 பில்லியன் டொலர் கடனை மீளஒழுங்குபடுத்த வேண்டியிருப்பதுடன், சீனாவிடமிருந்து புதிய கடன்களையும் பெற்றுக் கொள்ள விரும்புகிறது. அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்ட துறைமுகம் மற்றும் விமானநிலையம் ஆகியவற்றுக்காக சீனாவால் வழங்கப்பட்ட 1.6 பில்லியன் டொலர் உட்பட எட்டு பில்லியன் டொலரை சீனாவிடமிருந்து சிறிலங்கா கடனாகப் பெற்றுள்ளது.

'நிதிப் பிரச்சினைகள் மற்றும் கட்டுமானத் திட்டங்களுக்கான நிதித் தேவை போன்றனவே பிரதமர் விக்கிரமசிங்கவால் கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் மீளஆரம்பிக்கப்படுவதற்கான உடன்பாடு எட்டப்பட்டதற்கான பிரதான காரணங்களாகும்' என கொழும்பிலுள்ள பொதுக் கோட்பாட்டு நிறுவகத்தின் உதவி இயக்குனர் வீரக்கோன் டுஸ்னி தெரிவித்தார்.

'கடன் மீளச் செலுத்துவதை முகாமை செய்தல் என்பது மிகப் பாரிய பிரச்சினையாகும். கிட்டத்தட்ட சிறிலங்காவின் வெளிநாட்டுக் கடனின் அரைவாசி சலுகையற்ற மற்றும் வர்த்தக நோக்கிலான கடனாகும். இதனால் நாங்கள் சீனாவுடன் அரசியல் மற்றும் பொருளாதாரத் தேவைகளுக்காக தொடர்ந்தும் உறவைப் பேணவேண்டிய தேவையுள்ளது' என வீரக்கோன் டிஸ்னி தெரிவித்தார்.

**அமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் சிறிலங்காவுக்கு உதவத் தவறியதன் காரணமாகவே சிறிலங்காவானது சீனாவை நாடியதாக சில வல்லுனர்கள் நம்புகின்றனர்.**

'சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கத்தின் பிரதான பிரச்சினையாக பொருளாதார அபிவிருத்தி காணப்படுகிறது. சீனாவுடனான உறவை சிறிலங்கா தற்போது குறைப்பதற்கான முயற்சியை எடுத்த போதிலும், தனக்கு உதவுவதற்கு எந்த நாடும் முன்வராது என்பதை சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கம் உணர்ந்துள்ளது' என அனைத்துலக கற்கைகளுக்கான சங்காய் நிறுவகத்தின் தென்னாசியக் கற்கைகளுக்கான இயக்குனர் ஷவோ கன்ஞெங் சுட்டிக்காட்டியுள்ளார்.



'கடந்த ஒரு ஆண்டாக இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ சீனாவால் மேற்கொள்ளப்பட்டது போன்ற கவர்ச்சிகரமான பாரிய திட்டங்களை மேற்கொள்ள முன்வரவில்லை. இதனால் சிறிலங்கா மீண்டும் சீனாவின் பக்கம் திரும்பியுள்ளது' என 'வோ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா இந்திய மாக்கடலில் தனது கேந்திர அமைவிடத்தைப் பயன்படுத்தி சீனாவின் முதலீடுகளை உள்ளீர்ப்பதற்கு முயற்சிக்கிறது எனவும் ஷாவோ குறிப்பிட்டுள்ளார். 'அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற ஏற்கனவே சீனாவால் சிறிலங்காவில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களுக்கு அப்பால், சிறிலங்கா தனது இந்திய மாக்கடல் மீதான அமைவிடத்தைப் பயன்படுத்தி சீனாவுடன் புதிய கூட்டுத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்பை எதிர்பார்க்கின்றது' என 'வோ தெரிவித்தார்.

இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரண்டு நாடுகளாலும் வர்த்தக மற்றும் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் இந்திய மாக்கடலில் தனது இருப்பை நிலைப்படுத்துவதற்கு சீனாவிற்கு சிறிலங்கா தேவைப்படுகிறது. 1200 கிலோமீற்றர் நீளமான, சின்ஜியாங்கிலுள்ள சீன எல்லையை பாகிஸ்தானின் அரேபியக் கடல் மீதுள்ள குவாடர் துறைமுகத்துடன் இணைப்பதற்கான பாரிய திட்டத்திற்காக சீனா 26 பில்லியன் டொலரைச் செலவழித்துள்ளது.


'சீனா தனது பாரிய திட்டத்தை அமுல்படுத்துவதற்கான மிக முக்கிய கடற்பாதையில் சிறிலங்கா அமைந்துள்ளது. சீனா தனது மூலோபாய நலன்களை அடைந்து கொள்வதற்காகவும் சிறிலங்காவுடன் தொடர்பைப் பேணுகிறது. இது தவிர, சீனாவின் 'ஒரு அணை, ஒரு பாதை' என்கின்ற திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சிறிலங்காவின் பங்களிப்பும் மிகவும் முக்கியமான ஒன்றாகும் என பொதுக் கோட்பாட்டு நிறுவகத்தின் உதவி இயக்குனர் வீரக்கோன் டுஸ்னி சுட்டிக்காட்டியுள்ளார்.

'சீனாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அம்பாந்தோட்டை விமான நிலையமானது நெற் களஞ்சியமாகப்' பயன்படுத்தப்படுகிறது. சீனாவால் நிதியுதவி வழங்கப்பட்டு கட்டப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகமானது பயன்படுத்தப்படாத நிலையில் உள்ளது' என புதுடில்லியிலுள்ள பாதுகாப்பு மற்றும் மூலோபாயக் கற்கைகளு-க்கான நிறுவகத்தின் ஆய்வாளர் ஸ்மிருதி பட்நாயக் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் உருவாக்கப்பட்ட துறைமுகம், விமான நிலையம் மற்றும் கொழும்பு துறைமுக நகரத் திட்டம் போன்ற சீன ஆதரவுத் திட்டங்கள் அண்மைய சில ஆண்டுகளாக சிறிலங்காவில் அரசியல் சர்ச்சைகளை ஏற்படுத்தி வருகின்றன. 2014ல் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைகளில், அப்போதைய அதிபர் ராஜபக்சவால் சீன நிறுவனங்களிடமிருந்து ஊழல் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டதாக எதிர்க்கட்சியினர் குற்றம் சுமத்தியிருந்தனர். ராஜபக்சவிற்கு எதிராக விமர்சனம் செய்தவர்கள் தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

'சிறிலங்கா அரசாங்கமானது தற்போது இக்கட்டான நிலையை அடைந்துள்ளது. இது தற்போது வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது. இதனால் **சிறிலங்காவிற்கு தனது பொருளாதாரத்தை வீழ்ச்சியுறாது தொடர்ந்தும் நாட்டை நிர்வகிப்பதற்கு நிதி தேவைப்படுகிறது. குறுகிய கால அடிப்படையிலாவது சீனாவின் நிதியுதவி என்பது தற்போது சிறிலங்காவிற்குத் தேவைப்படுகிறது.**

ஆனால் சிறிலங்கா வாழ் மக்களுக்கு சீனத் திட்டங்கள் பயனற்றவையாகும்! என கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளரும் ஆய்வாளருமான சமிந்தா ஹெற்றியாராச்சி தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உருளைக்கிழங்கு பட்டாணி கட்லெட்

### தேவையான பொருட்கள்

உருளைக்கிழங்கு - அரை கிலோ, பச்சைப் பட்டாணி - 200 கிராம், உப்பு - தேவைக்கேற்ப, மைதா - 2 மே.கரண்டி, எண்ணெய் - அளவாக, தக்காளி - அரை கிலோ, காரப்பொடி - 1 தே.கரண்டி, சர்க்கரை - 1 சிட்டிகை, வெங்காயம் - 3, பச்சைமிளகாய் - 3, இஞ்சி - 1 துண்டு, கொத்தமல்லி - சிறிது

### செய்முறை

**வெ**ங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி ஆகியவற்றை அரைத்துக் கொள்ளவும், தக்காளிப் பழத்தைச் சூடான நீரில் போட்டு, தோலை உரித்து, மிக்ஸியில் அரைத்து தனியாக வைத்திருக்கவும். பின் உருளைக்கிழங்கை உப்பு போட்டு, பதமாக உடைந்துவிடாமல் வேகவிடவும், வெந்தவுடன் தோல் நீக்கவும், அத்துடன் பட்டாணியை சிறிது உப்புப் போட்டு வேகவைக்கவும். மைதா மாவை சிறிது நீர் சேர்த்து, பேஸ்ட்போல் ஆக்கவும். பிறகு உருளைக்கிழங்கை இரண்டாக வெட்டி, அதன் நடுவே உள்பக்கப் பகுதியை ஒரு கரண்டியினால் தோண்டி, கிண்ணம் போல செய்துகொள்ளவும். பின், துளை செய்த இடத்தில் வேகவைத்த பட்டாணியைக் கொஞ்சம் வைத்து அடைக்கவும். இரண்டு பாகங்களையும் கொஞ்சம் மைதா பேஸ்ட்டை எடுத்துத் தடவிப் பொருத்தவும். அதேபோல், எல்லாக் கிழங்குகளையும் அடைத்து எடுத்துக் கொள்ளவும். பின் கிழங்குகளைப் பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும். அரைத்து எடுத்த மசாலாவை, மிதமான தீயில் வதக்கவும், இதில் தக்காளி விழுதை சேர்க்கவும். அத்துடன் உப்பு, காரப்பொடி, சர்க்கரை சேர்த்துக் கொதிக்கவிட்டு, அடுப்பிலிருந்து இறக்கி விடவும். இதில் பொரித்தெடுத்த உருளைக்-கிழங்குகளைச் சேர்க்கவும்.

## ஆட்டிசம் குறித்த சில தகவல்கள் :




**அறிகுறிகள்**

1. குழந்தை யார் முகத்தையும் பார்க்காதிருத்தல்,
2. தனியாக இருப்பதை விரும்புதல்,
3. காது கோளாறு போல் இருத்தல்,
4. காரணமின்றி மற்றவர்களை தாக்குதல்,
5. அதிக வலியை தாங்கிக் கொள்ளுதல்,
6. கை, கால்களை வேகமாக அசைத்து வித்தியாசமாக சத்தம் போடுதல்,
7. தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்ளுதல்,
8. பேச்சுத் திறன் குறைதல்,
9. விரல் சூப்புதல், நகம் கடித்தல்,
10. பதட்டநிலை,
11. அடம் பிடித்தல்.

மற்ற குழந்தைகளைப் போல் அல்லாமல் இக்குழந்தைகளின் பார்வை, கூரையையே வெறித்து பார்ப்பது போல், ஒரே இடத்தில் நிலைத்திருக்கும். நாம் ஒருவரிடம் பேசும் போது கண்ணைப் பார்த்து பேசுவது போல், ஆட்டிசம் குழந்தைகள் கண்ணைப் பார்த்து பேசாது. கைகளை உதறிக் கொண்டே இருக்கும்.


மற்ற குழந்தைகளை நாம் கட்டி அணைப்பது போல், இக்குழந்தைகளை கட்டிப் பிடித்தால் கோபம் வரும்.

சில குழந்தைகள் மூர்க்கமாக நடந்து கொள்வர். தண்ணீர் வேண்டும் என்றால் வாய் திறந்து கேட்காமல், சைகை மூலம் கேட்பார்கள். சில குழந்தைகள் சொன்னதையே திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

எதற்காக சிரிக்கிறார்கள். எதற்காக அழுகிறார்கள் என தெரியாது. வலி, சிறிய அளவில் இருந்தாலும் ஹஓ" என அலறும். சில குழந்தைகள் கடும் வலி இருந்தாலும் வலியை உணர்வதில்லை.

**தொடரும்**

அழகு குறிப்பு



## சிவந்த உதடுகளுக்கு ஆசைப்படுகிறீர்களா??

வெயில் மற்றும் மழை காலங்களில், அந்தந்த சூழ்நிலைகேற்ப உதடுகளை முறையாக பராமரித்து வந்தாலே போதும், உங்கள் உதடுகளும் அழகாக இருக்கும்.

உதடுகளில் பிளவுகள் ஏற்பட்டு காய்ந்து விடும். மேலும் சிலருக்கு உதடுகள் கறுத்தும், வெடிப்புகளும் ஏற்படும். அவர்கள் பாலாடையுடன் நெல்லிக்காய் சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், கறுமை மறைந்து சிவந்த நிறம் உண்டாகும்.

வெண்ணெயுடன் ஆரஞ்சு பழச்சாறு கலந்து, உதடுகளில் தடவி வந்தால், வெடிப்புகள் சரியாகி உதடுகள் மென்மையாகும்.

சிவப்பாக இருப்பவர்களுக்கு எல்லா கலர் லிப்ஸ்டிக்கும் பொருத்தமாக இருக்கும். ஆனால் மாநிறமாகவோ, கறுப்பாகவோ இருப்பவர்கள் சரியான கலர் லிப்ஸ்டிக்கினை தேர்வு செய்ய வேண்டும்.

கறுப்பாக இருப்பவர்கள் மிகவும் லைட்டாகவோ அல்லது டார்க்காகவோ இல்லாமல், பொதுவான கலரில் லிப்ஸ்டிக் பயன்படுத்தலாம்.

மாநிறமாக இருப்பவர்கள் இயற்கையான நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், அழகாக இருக்கும்.

வெயில் காலங்களில் இரண்டு கலர்களை சேர்த்து லிப்ஸ்டிக் போட்டு கொண்டால், எடுப்பாக இருக்கும்.

லிப் லைனர் உபயோகிக்கவும்: லிப்ஸ்டிக்குக்கு ஏற்ற வகையில் லிப் லைனர் மற்றும் பென்சிலை தேர்ந்தெடுக்க வேண்டும். லிப் லைனர் பயன்படுத்தும் போது, பெரிய உதடு உள்ளவர்கள், உதடுக்கு உள்ளே வரைந்தால், உதடுகள் சிறியதாக தெரியும். உதடுகள் பெரிதாக தெரிய வேண்டுமெனில், முதலில் தேவையான நிறத்தில் லிப்ஸ்டிக் போட்டு கொள்ள வேண்டும். பிறகு வெள்ளை நிற லிப்ஸ்டிக்கை உதட்டின் நடுவில் தடவினால், உதடுகள் பெரிதாக பளிச்சென்று தெரியும்.

உதடுகள் காய்ந்திருக்கிறது என்று, அடிக்கடி எச்சிலால் உதட்டை ஈரப்படுத்தக் கூடாது.

# "கண் திறந்தே உறங்குகின்றோமா???"

## உலக நீர் தினமும், சம்பூர் நிலக்கரி மின்நிலையத்தினால் எமக்கு ஏற்படவிருக்கும் நீர் வளப் பாதிப்புக்களும்

பாகம் - 04

கடந்தவார தொடர்ச்சி.....

சு.சிவசங்கரன் M.Sc. (PDN)
முதுவிஞ்ஞானமாணி
ஒருங்கிணைந்த நீரியல்வள முகாமைத்துவம்

### பாரஉலோகங்களால் மனிதனுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

| | |
|---|---|
| பாதரசம் (Hg) | இதுவும் ஒரு புற்று நோயாக்கியாகும். நரம்புத் தொகுதியை அதிகமாக பாதிக்கச் செய்வதுடன் தோல் அழற்சி மற்றும் நொதியச் செயற்பாடுகளில் தாக்கம் என்பவற்றை உண்டுபண்ணும். அதிகமாக உள்ளெடுக்கப்படும் போது மூளைப்பாதிப்புகள் அசாதாரண உடற் கட்டிகள், பார்வை, கேட்டல் குறைபாடுகள் என்பவற்றை தோற்றுவிப்பதுடன் ஞாபகசக்தியையும் பாதிக்கும். |
| அந்திமொனி (Sb) | வாந்திபேதி, மூட்டு தசைவலி, இதயநோய்கள் போன்றவற்றை உருவாக்க வல்லது. |
| நிக்கல் (Ni) | இது நிக்கல் அசற்ரேற் வடிவத்தில் நீரில் கரையும். உள்ளெடுக்கப்படும்போது விரல்கள் கைகள் முன்னங்கை என்பவற்றில் எரிவை ஏற்படுத்தும். உணவுக்கால்வாய் தொகுதியில் அசாதரண விளைவை உண்டுபண்ணும் நீண்ட காலத்தில் தோல் நோயை ஏற்படுத்தும். |
| வெள்ளீயம் (Sn) | தோல் கண்களில் எரிவு, தலைவலி, வயிறு எரிவு, மன அழுத்தம், மூளைப்பாதிப்பு போன்றவற்றை ஏற்படுத்தும். நீண்டகாலத்தில் நிறமூர்த்தப் பாதிப்புகளை உண்டாக்கி விகாரத்தோன்றல்களை உண்டாக்கலாம். அத்தோடு நிணநீர் தொகுதியின் செயற்பாட்டையும் பாதிக்கும். |
| தோரியம் (Th) ஸ்ரொஞ் ஜியம்(Sr) | இவை கதிர் தொழிற்பாட்டு உலோகங்களாகும். இவை உடலில் சேரும் இடங்களில் புற்று நோயாக்கிகளாகச் செயற்படும். இவை சிறு பிள்ளைகளின் என்பு வளர்ச்சியை பாதிக்கும். பரம்பரையில் விகாரங்கள் தோற்றுவிக்கும். |

பாரஉலோகங்களைப் போன்று மனிதனுக்கும் சூழலுக்கும் தீங்கை விளைவிக்கும் கந்தகம் (S) மற்றும் நைதரசன் (N) போன்றவற்றின் ஒக்சைட்டுக்களும் வெளிவிடப்படுகின்றன. இவ் அலோக ஒக்சைட்டுகள் வாயுக்களாகும். சூழற்றாக்க மதிப்பீட்ட றிக்கையின் (EIA report) பிரகாரம் வெளிவிடப்படும் கந்தக ஒக்சைட்டுக்களின் ($SO_2$) 78.8% மின்நிலையத்தின் FDG பொறி-முறையின் மூலம் சீமெந்து உற்பத்திக்குத் தேவைப்படும் கிளிங்கராக மாற்றப்பட்டு அகற்றப்படவிருக்கிறது. ஆனால் வெளிவிடப்படும் நைதரசனின் ஒக்சைட்டுக்களை அகற்றுவதற்கான எந்தவொரு ஏற்பாடுகளும் இத்திட்டத்தில் முன்மொழியப்படவில்லை. எனவே இந் நிலக்கரி மின்நிலையம் செயற்படும் பட்சத்தில் நாளொன்றிற்கு 25 தொனன்னிற்கும் அதிகமான $SO_2$வும் 29.4 தொன் $NO_x$ ம் வளிமண்டலத்திற்கு நேரடியாகவே விடப்படும் என்று வெளிப்படையாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வெளியாகும் $SO_2$ வளிமண்டலத்தில் [illegible] சேர்ந்து 38.3 தொன் சலபூரிக் அமில மூலக்கூறுகளையும் $NO_x$ 40.3 தொன் நைத்திரிக் அமில மூலக்கூறுகளையும் நாளொன்றுக்கு உருவாக்க வல்லது. இவையிரண்டும் அமிலத்தன்மை கூடிய வன்னமிலங்களாகும்.

வளிமண்டலத்தில் செறிவாகும் இக் காற்றுக் கழிவுகள், பலமான தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில் வங்காள விரிகுடா நோக்கி நகர்ந்து ஐதாக்கப்படும். ஆனால் வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலங்களிலும், பருவக் காற்று இடைக்காலத்திலும். இவை மூதூர், கிண்ணியா, தம்பலகாமம், திருகோணமலை, சேருவில போன்ற பகுதிகளுக்குப் பரவி தாக்கத்தை ஏற்படுத்தும்.

**தொடரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 25

**சென்றவார விடைகள்**

01. 1 02. 2 03. 4 04. 3 05. 1 06. 1 07. 4

01. பி.ப 2.45 02. 800m 03. 0.6 04. 14 வயது 1மாதம்
05. 3/4 06. ரூ 37.50 07. 10Km 08. 300cm

01. இலங்கைக்கே உரித்தான தாவரம் அல்லாதது
 I. காட்டிலுப்பை ii. மா iii. நிலவேம்பு iv. பெரும்பிரம்பு

02. எமக்கு இலவசமாகக் கிடைக்கும் சேவை ஒன்று
 I. மின்சாரம் ii. தபால் iii. சுகாதாரம் iv. போக்குவரத்து

03. வளவகங்கை கடலுடன் கலக்குமிடம்
 I. களுத்துறை ii. அம்பாந்தோட்டை iii. மாத்தறை iv. கொழும்பு


04. நுளம்புக்கடியைத் தடுப்பதற்கு உடலில் பூசப்படுவது
 I. மண்ணெண்ணெய் ii. புல்லெண்ணெய்
 iii. நல்லெண்ணெய் iv. தேங்காய் எண்ணெய்

05. தேசப்படங்களில் நதிகளைக் குறித்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்?
 I. சிவப்பு ii. பச்சை iii. நீலம் iv. கறுப்பு

06. கொழும்புப் பிரதேச கடலில் கலக்கும் நதி?
 I. நில்வள கங்கை ii. களனி கங்கை
 iii. மாணிக்கங்கை iv. வளவகங்கை

07. பரப்பும் பலகை பயன்படுத்தப்படும் தொழில்
 i. விவசாயத் தொழில் ii. கொல்லன்
 iii. தச்சுத்தொழில் iv. மட்பாண்டத்தொழில்

**பகுதி – 02**



01. இவ்வுருவில் நிறந்தீட்டப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

..............................................................

02. அப்பிள் பழம் ஒன்றின் விலை ரூ 28.50 ஆகும். 12 அப்பிள் பழங்களின் விலை யாது?

..............................................................

02. 19:30 மணித்தியாலயம் எனும் டிஜிற்றல் கடிகார நேரத்தை சாதாரண நேரமாகத் தருக?

..............................................................

**03. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை தருக**

1. சிறைத் தண்டனை பெற்றவன் : ..............................................
2. சுதந்திரமற்று வாழ்பவன் : ..............................................

**04. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக**

1. ஆதிகாலத்தில் தரைமார்க்கமாகச் செல்வதற்கு மாட்டுவண்டி குதிரைவண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.
2. தலைவா வருக வருக

**05. கீழே தரப்பட்டுள்ளவற்றிற்கு அடைப்புக்குள் இருந்து பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக**

(இனிப்பு, மகிழ்ச்சி, கிளை, மரம், திங்கள்)

1. சினைபெயர்ச்சொல் :- ..............................................
2. குணப்பெயர்ச்சொல் :- ..............................................
3. பொருட்பெயர்ச் சொல் :- ..............................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**







## கலங்கரை விளக்கு

கடற்கரை ஓரம் இருந்த ஊரில் ஒரு கலங்கரை விளக்கு இருந்தது. அந்தக் கடற்கரை ஓரம் கப்பல் போக்குவரத்து அதிகம். எனவே அங்கு ஒரு கலங்கரை விளக்கை அமைத்திருந்தார்கள். எண்ணையால் எரியும் விளக்கு அது. கலங்கரை விளக்கை செயல்படுத்த ஒரு காப்பாளன் புதிதாக வேலைக்குச் சேர்ந்திருந்தான்.

வாராவாரம் தேவையான எண்ணையை கப்பல் நிறுவனங்கள் அவனுக்குத் அனுப்பிக் கொண்டிருந்தன. காப்பாளனின் முக்கியமான வேலை கலங்கரை விளக்கு அணையாமல் பார்த்துக்கொள்வது.


ஒரு கடுங் குளிர்கால இரவில் கலங்கரை விளக்கின் அலுவலகக் கதவை யாரோ தட்டினார்கள். காப்பாளன் கதவைத் திறந்து பார்த்தான். பக்கத்து ஊரைச் சேர்ந்த முதியவர் ஒருவர் குளிரில் நடுங்கிக் கொண்டே நின்று கொண்டிருந்தார். "தம்பி! என் வீட்டில் விளக்கெரிக்கக் கூட எண்ணை இல்லை. குளிர் நடுக்குகிறது. நீ மிகவும் நல்லவனாகத் தெரிகிறாய். கொஞ்சம் எண்ணை கொடுத்தால் பிழைத்துக் கொள்வேன். சீக்கிரம் திருப்பிக் கொடுத்து விடுவேன்" என்று கெஞ்சினார்.

மனமிளகிய காப்பாளன் அவருக்குக் கொஞ்சம் எண்ணை கொடுத்தனுப்பினான். அடுத்த நாள் இரவு இன்னொருவர் கதவைத் தட்டி எண்ணை கேட்டார். காப்பாளனும் வழிப்போக்கனுக்கு எண்ணை கொடுத்தனுப்பினான். மூன்றாம் நாளும் இதே கதை தொடர்ந்தது.

வாரக் கடைசி. அடுத்த வாரத்திற்கான எண்ணையைக் கொண்டு வரும் வண்டி வர இரண்டு நாளாகும். காப்பாளன் வழக்கம் போல விளக்கிற்கு எண்ணை நிரப்ப பீப்பாயைத் திறந்து பார்த்தான். பீப்பாயில் இருந்த எண்ணை வாரக் கடைசி வரை விளக்கைச் செலுத்தப் போதாது என்று புரிந்தது.

இருந்த எண்ணையை விளக்கில் நிரப்பி அதை எரிய விட்டு விட்டு பதறிப் போய் ஊருக்குள் ஓடினான். கடன் வாங்கியவர்கள் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டான். எல்லோரும் கை விரித்து விட்டார்கள்.

வாரக் கடைசியில் இரவில் எண்ணை தீர்ந்து போய் விளக்கு அணைந்து விட்டது. இரண்டு கப்பல்கள் அன்று இரவு கலங்கரை விளக்கு எரியாததால் வழி தவறிப் போய் பாறையில் மோதிச் சிதறி விட்டன. மூன்று பேருக்கு உதவுவதற்காக தன் முதன்மைக் கடமையில் தவறிய காப்பாளன், முன்னூறு பேரின் உயிர் சேதத்திற்குக் காரணமானான்.



**பாத்திரம் அறிந்தே பிச்சையிட வேண்டும்.**

**சிந்திக்க**

**நம்மிடம் எதுவும் இல்லை என நினைப்பது ஞானம்: நம்மைத் தவிர எதுவுமில்லை என நினைப்பதுஆணவம் ஆகும்.**

**பாராட்டு பெறுவோர்**

வி. ஜோவஷனி, வள்ளுவர் வீதி, ஆலங்கேணி கிழக்கு

வீ.ஆனந்தபிரியன் 102, ஏகாம்பரம் வீதி, திருமலை



தரப்பட்டுள்ள இப்படத்திற்கு நிறந்தீட்டி மலைமுரசு அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

வயதெல்லை : 12 வயதிற்கு குறைந்த மாணவர்கள் மாத்திரம்

*அனுப்ப வேண்டிய முகவரி : மலைமுரசு. இல - 159ஏ, கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு குறித்த வேலையை செய்து முடிப்பதற்கு ஒரு மனிதன் 8 நாட்கள் எடுக்கின்றான். அத்தகைய இரு மனிதர்கள் இரண்டு நாட்கள் வேலையை செய்தால் அவ்வேலையில் என்ன பின்னத்தைச் செய்து முடிக்கலாம்?

02. மூன்று தோடம்பழங்களின் விலை ரூபா 72 எனின், ஒரு தோடம்பழத்தின் விலை எவ்வளவு?

03. A, B என்பன ஒன்றிலிருந்து ஒன்று 10செ.மீ தூரத்தில் இருக்கும் இரு புள்ளிகள் ஆகும். கேத்திர கணித அறிவைப் பயன்படுத்தி,

1. A யிலிருந்தும் B யிலிருந்தும் சம தூரத்தில் இயங்குகின்ற ஒரு புள்ளியின் ஒழுக்கையும்
2. அவ்வொழுக்கின் மீது புள்ளி A யிலிருந்து 7செ.மீ தூரத்திலுள்ள P, Q எனும் இரு புள்ளிகளினதும் அமைவுகளை பெறும் விதத்தை உரிய அளவீடுகளுடன் ஒரு பரும்படிப் படத்தில் காட்டுக.

03. 1.25செ.மீ ஐ சொன்ரி மீற்றரில் தருக.

**பகுதி 02**

01. ஐந்து ஐஸ் பைக்கற்றுகளையும் எட்டு ஜெலிகளையும் செய்து முடிப்பதற்கு ரூ350 தேவை. ஓர் ஐஸ் பைக்கற்றின் விலை ஒரு ஜெலியின் விலையிலும் பார்க்க ரூபா 5 இனால் கூடியது.

1. ஓர் ஐஸ் பைக்கற்றின் விலை ரூx எனவும் ஒரு ஜெலியின் விலை ரூ y எனவும் கொண்டு x, y ஆகியன இடம்பெறும் ஓர் ஒருங்கமைச் சமன்பாட்டு சோடியை உருவாக்குக
2. அச்சமன்பாட்டு சோடியைத் தீர்த்து ஓர் ஐஸ் பைக்கற்றின் விலையையும் ஒரு ஜெலியின் விலையையும் தனித்தனியே காண்க.

## பாடம் : வரலாறு

01.
1. சாசனங்கள் எழுத்துருவானவை எழுதி வைக்கப்படும் 3 சாதனங்களை எழுதுக.
2. தொல்பொருள் மூலாதாரங்களாக கருதப்படும் 4 வகையை எழுதுக.
3. இலங்கையின் வரலாற்றை அறிய உதவும் சிறந்த மூலாதாரமாக கருதுவது எது?
4. இதன் மூலம் எத்துறைகளின் அறிவிப்பினைப் பெறலாம் என 3 உதாரணம் மூலம் குறிப்பிடுக.
5. தொல்பொருள் மூலாதாரங்கள் அழிவடைவதில் மக்களின் நடவடிக்கைகள் 3 ஐக் குறிப்பிட்டு விளக்குக.

02.
1. நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் 3 தாபனங்களும் எவை?
2. பண்டைய இலங்கையின் முதல் இரு தலைநகரங்களும் எவை?
3. பண்டுகாபய மன்னன் அனுராதபுரத்தின் ஆட்சியாளனாகவும் அவரது செயற்பாடுகளை முன்னெடுத்த விதங்கள் தொடர்பாகவும் 2 காரணிகளைக் கூறி விளக்குக.
4. 1ம் விஜயபாகு மன்னன் இந்நாட்டை ஆண்ட மன்னர்களுள் சிரேஷ்டமான ஒருவனாக கருதப்படுவதற்கான 3 காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக.

03.
1. இலங்கையில் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு நாணயங்கள் மூன்றைக் குறிப்பிடுக.
2. இலக்கிய மூலாதாரங்களின் இரு வகைகளும் எவை?
3. வரலாற்றுக்கு முற்பட்ட கால வாழ்க்கை முறையின் 5 இயல்புகளை எழுதுக.
4. கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் 6ஐக் குறிப்பிடுக.

ஆசிரியர் . திரு.த.ராஜ்குமார் (N.C.A.T/HNDA)
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

## Grammar

**Fill in he blanks using the correct form of the verb given within brackets.**
**Some verb forms have more than one word.**

Mr.Piyasena (1) ................................ (ride) his bicycle to work everyday, even on rainy days. He has loved bikes ever since he (2) ........................................ (give) his first bicycle by his father on his fifth birthday. When he become fifty years old this year, he (3) ........................................ (ride) a bicycle for 45 years.

Some times people ask Mr.Piyasena why he (4) ........................................ (not use) a car. "I'm not sure", he says "in a car I do not get the feel of the wind or he sun on my face".

"When I'm (5) ........................................ (work) in my office, I have to sit inside a room for about eight hours of he day. So I prefer (6) ........................................ (ride) my bike to work and feel the wind on my face rather than driving a car".

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

### பதவியல்

இறந்த கால இடைநிலைகள் : த், ட், ற், இன், ன், இ
செய்தான்= செய்+ த்+ ஆன்
உண்டான்= உண்+ ட்+ ஆன்
தின்றான்= தின்+ ற்+ ஆன்
ஓடினான்= ஓடு+ இன்+ ஆன்
போனான்= போ+ ன்+ ஆன்
கூடியது= கூடு+ இ+ அ+ து

நிகழ்கால இடைநிலைகள் : ஆநின்று, கின்று, கிறு
நடவாநின்றான்= நட+ ஆநின்று+ ஆன்
நடக்கின்றான்= நட+ கின்று+ ஆன்
நடக்கின்றான்= நட+ கிறு+ ஆன்
ஆநின்று என்னும் இடைநிலை தற்கால வழக்கில் இல்லை.
எதிர் கால இடைநிலைகள்
உண்பான்= உண்+ ப்+ ஆன்
செய்வான்= செய்+ வ்+ ஆன்
எதிர்மறை இடைநிலைகள் : இல், அல், அன்
நடந்திலன்= நடந்து+ இல்+ அன்
நடக்கின்றிலன்= நட+ கின்று+ இல் + அன்
நடக்கலன்= நட+ க்+ க்+ அல் + அன்
நடவாதான= நட+ வ்+ ஆ+ த + ஆன்

தெரிநிலை வினைகளில் இடைநிலைகளே பெரும்பாலும் காலங்காட்டும். சில சந்தர்ப்பங்களில் விகுதிகளும் பகுதிகளும் காலங்காட்டுவதுண்டு.



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## பாடம் : விஞ்ஞானம்

01. ஒளித்தொகுப்புப் பற்றி கற்கும் மாணவன் ஆய்வுகூடப் பரிசோதனைகளைக் கொண்டு ஒளித்தொகுப்பிற்குத் தேவையான எக்காரணியைச் செய்து காட்டல் கடினமாக இருக்கும்?
1. ஒளி 2. நீர் 3. பச்சையம் 4. காபனீரொட்சைட்டு

02. நீரை வெப்பமாக்கும் மின் கேத்தலின் உட்பகுதியில் வெண்ணிறத் திண்மப் பொருள் படிந்திருப்பதைக் கண்ட மாணவன் ஒருவன் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தான்.
A - இங்கு வன்னீர் வெப்பமாக்கப்பட்டுள்ளது.
B - இந்நீர் தற்காலிக வன்மையைக் கொண்டுள்ளது.
C - இந்நீரில் கல்சியம் ஐதரசன் காபனேற்று அல்லது மக்னீசியம் ஐதரசன் காபனேற்று உப்பு கரைந்துள்ளது.

இம்மாணவனின் அவதானிப்புகளிற்கேற்ப அவனின் கூற்றுக்களில் உண்மையானவை?
1. A, B ஆகியன 2. B, C ஆகியன
3. A, C ஆகியன 4. A, B, C ஆகியன

03. கைத்தொழில் துறையில் போன்று உணப் பொருள்களைத் தயாரிப்பதிலும் பல்வேறு நுண்ணங்கிக் கூட்டங்கள் பயன்படுகின்றன. நுண்ணங்கிக் கூட்டமாகிய பங்கசு பின்வரும் எவ்வுற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றது?
1. உயிர்வாயு 2. பாண் 3. யோகட் 4. தயிர்

04. பிளெமிங்கின் இடக்கை விதி பயன்படுத்தப்படுவது?
1. காந்தப் புலத்தில் வைக்கப்பட்ட கடத்தி அசையும் போது தூண்டப்படும் மின்னோட்டத்தின் திசையைக் காண்பதற்கு
2. மின்னோட்டத்தைக் கொண்டு செல்லும் கடத்தியைக் காந்தப்புலத்தில் வைக்கும் போது அது அசையும் திசையைக் காண்பதற்கு
3. மின்னோட்டத்தைக் கொண்டுசெல்லும் கடத்திச் சுற்றிக் காந்தப்புலத்தின் திசையைக் காண்பதற்கு
4. மின்னோட்டத்தைக் கொண்டுசெல்லும் கடத்தி அசையும் திசையைக் காண்பதற்கு

05. பின்வரும் எக்கோட்பாட்டைப் பயன்படுத்தி ஒளிப்பிரதியெடுக்கும் பொறி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது?
1. மின்பகுப்பு 2. வெப்ப இடமாற்றம்
3. நிலைமின்னேற்றம் 4. மின்னியக்கவியல்

06. மனிதனின் பிரதான நைதரசன் கழிவுப் பொருள்களாகிய யூரியா யூரிக்கமிலமும் உற்பத்தி செய்யப்படுவது?
1. சிறுநீரகத்தினுள்ளே 2. ஈரலினுள்ளே
3. சதையியினுள்ளே 4. சிறுநீரகத்தியினுள்ளே

ஆசிரியர் . திரு.த.சேகரன் (B.Sc Agric (Hons))
Oxford கல்வி நிலையம், இலிங்கநகர், திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில்..

திணைக்களங்களில் அவர்களின் ஆதரவாளர்கள் கடமையாற்றுவதாகும் சில வேளைகளில் மாகாணசபையின் செயற்பாடுகள் பாராளுமன்ற மன்றத்தை மதிக்காத நிலை நாட்டின் பல பகுதிகளில் காணப்படுகிறது இதனை தடுப்பதற்கான சட்டமூலங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும் கிழக்குமாகாண சபையில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை ஏற்படுத்துவதன் மூலமே இதற்கான நிரந்தர தீர்வை பெற முடியும் தற்போதைய சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய தேசிய கட்சிக்கு சாதகமான நிலையே காணப்படுகிறது இங்கு தேசிய தலைவர் என்ற நாமத்துக்கு இருவர் முட்டிமோதிக் கொள்கின்றனர். ஒருவர் மாநாடு நடத்துகிறார். மற்றவர் பாராளுமன்ற உறுப்பினர்களோடு வந்து வாக்குறு-திகளை அள்ளி வீசுகிறார். ஆகவே விரைவில் கிழக்கு மாகாண சபை ஐக்கிய தேசிய கட்சியின் கட்டுபாட்டுக்குள் வரும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

''சாவகச்சேரியில் மீட்கப்பட்ட தற்கொலை அங்கிகளை கொண்டு நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி -யுள்ளது என தெற்கில் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர். யுத்தம் முடிந்த நாடு ஒன்றில் ஆயுதங்கள் மீட்கப்படுவது வழமையான நிகழ்வு. சென்ற ஆட்சிகாலத்தில் பல பகுதி -களில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன அப்போது இல்லாத பாதுகாப்பு அச்சுறுத்தல் இப்போது மட்டும் எவ்வாறு ஏற்பட்டது? ஆனால் யுத்தத்தின் பின் மீட்கப்பட்ட புலிகளின் தங்கம் எங்கே என கேட்டால் விடை கூற யாருமில்லை.

அண்மையில் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக முறைப்பாடு செய்ய ஜெனீவா சென்றார்கள். அவர்களது ஆட்சிகாலம் முழுவதும் ஜெனீவாவை தூற்றியவர்கள் இன்று ஜெனீவா சென்று வெள்ளையர்களின் காலில் மண்டியிட்டுள்ளனர். இவர்களின் கோமாளித்தனத்தை இனியாவது விட்டு-விட்டு மக்களுக்கு சேவையாற்றுமாறு இவர்களுக்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அண்மையில் வெளிவந்துள்ள பனாமாவில் வரிஏய்ப்பு செய்த பிரபலங்களின் பட்டியலில் இலங்கை அரசியல்வாதிகள் இருவரின் பெயர் இடம்பெற்றுள்ளதாக அறியக் -கிடைத்தது.

இவ்வாறான குற்றசாட்டுகளில் இருந்து தப்பிக்கவே ஆட்சிமாற்றத்தை ஏற்படுவோம் என கூறி சிலர் மக்கள் முன் கோமாளிகளாக காட்சியளிக்-கின்றனர்

இவர்கள் எவ்வாறான சதித்திட்ட-ங்களை தீட்டினாலும் நல்லாட்சியையும் எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள ஜக்கியதேசிய கட்சியின் ஆட்சியையும் இவர்களால் தடுக்கமுடியாது என இம்ரான் மஹ்ரூப் கூறினார்

## தமிழ்ப் பேரவை...

தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழப் பேரவையால் முன்வைக்கப்பட்ட முதலாவது மறுசீரமைப்பு வரைபில் தமிழ்த் தேசம் என்ற சொற்பதம் பாவிக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக " மக்கள் கூட்டம்" என்ற பதமே பாவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் குறித்த முன்வரைபை முன்வைத்து மாவட்டங்கள் தோறும் நடத்தப்பட்ட மக்கள் கருத்துக் கணிப்புகளின் போதும், அறிவுடையோரிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பின்னூட்டங்களின் போதும் மக்கள் கூட்டம் என்பது தமிழ் மக்களின் உண்மையான அரசியல் அபிலாசையான "சுயநிர்ணய உரிமை" என்பதை தெட்டத் தெளிவாக வெளிக் -காட்டாது எனத் தெரிவிக்கப் -பட்டிருந்ததுடன், தமிழ்த் தேசம் என்ற வார்த்தைப் பிரயோகமே தமிழ் மக்களின் உண்மையான அரசியல் அபிலாசையை வெளிப்படுத்தும் என்பதும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டு வந்தது.

தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாடானது 1951ல் திருகோண-மலையில் கூட்டப்பட்ட போது தமிழர்கள் தனித் தேசத்திற்கு உரித்துடையவர்கள் என்பதே முதலாவது தீர்மானமாக நிறைவேற்றப் பட்டது. அதனடிப்படையில் தமிழர்களின் தீர்வு யோசனைகள் யாவும் தமிழர்கள் தனித் தேசத்திற்கு உரித்துடையவர்கள் என்பதனை முன்நிறுத்தியே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பேரவையின் முன்வைக்கப்படட்டிருந்தது.

அதனடிப்படையிலேயே குறித்த அழுத்தங்களுக்கு மதிப்பளித்துப் பேரவை தனது இறுதி அரசியலமைப்பு மறுசீரமைப்பு ஆலோசனைகளில் "மக்கள் கூட்டம் " என்ற வார்த்தைப் பிரயோகத்திற்குப் பதிலாகத் தமிழத் தேசம்'' என்ற வாரத்தையைப் பிரயோகிக்க இணக்கம் காணப்-பட்டுள்ளது.

## மீளக்குடியேற்றியதால்...

அவர் மத்திய சுற்றாடல் அதிகார சபை பல மாதங்களாகக் காலதாமத்தை ஏற்படுத்தி வருவதாகவும் முன்னர் ஆராயப்பட்ட விடயங்களை விட மேலும் இரு விடயங்களில் சுற்றாடல் அதிகார சபை கவனமெடுக்க வேண்டும் என மூன்று மாதங்களின் பின்னர் தெரிவித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். சட்டப்படி சுற்றாடல் அதிகாரசபை 30 நாட்களுக்குள் தமது கணிப்பை வழங்க வேண்டும் எனக் கோடிட்ட குறித்த கம்பனியின் அதிகாரி ''இருந்தாலும் கூட சுற்றாடல் அதிகாரசபையின் அனைத்துக் கேள்விகளுக்கும் தாம் பதிலளித் -திருப்பதாகத்" தெரிவித்துள்ளார்.

இதேவேளை என்வயர்ன்மென்டல் பௌண்டேசன் லிமிட்டட் என்ற தன்னார்வச் சுற்றுச் சூழல் அமைப்பு அனல் மின்நிலையத்தினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையிட்டு சனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பியிருப்பதாகத் தெரிகின்றது.

## 19000 மில்லியன்....

அச்செய்தி தெரிவிக்கின்றது.

குளோபல் பைனான்சியல் இன்டிகிறிட்டி என்ற அந் நிறுவனமானது 2004ம் ஆண்டு தொடக்கம் 2013ம் ஆண்டு வரையான பத்தாண்டுகளில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்தான சட்டவிரோத நிதிப்பாய்ச்சல் என்ற தனது அறிக்கையில் இத்தகவல்களைத் தந்துள்ளது.

மேற்போந்த காலப்பகுதியில் முதலாவது ஆண்டு மட்டுமே ஸ்ரீலங்காவின் சனாதிபதியாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் எஞ்சிய ஒன்பது ஆண்டுகளும் மஹிந்த ராசபக்சவும் சனாதிபதியாகப் பதவி வகித்துள்ளனர்.

முறையே 2004ல் - 1487, 2005ல் - 1389, 2006ல் - 1554, 2007ல் - 1890, 2008ல் - 1655, 2009ல் - 1435, 2010ல்- 2634, 2011ல் - 4602, 2012ல் -1567, 2013ல் -1753 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கறுப்புப் பணமாகக் கடத்தப்பட்டிருப்பதாக இத்தகவல் தெரிவிக்கின்றது.

யுத்தம் நிறைவடைந்த 2009ம் ஆண்டைத் தொடர்ந்த இரண்டு ஆண்டுகளிலுமே மிகப் பெருந்தொகை கறுப்புப்பணமாக கடத்தப் பட்டிருப்பதைப் புள்ளிவிபரங்கள் தெளிவாகக் காட்டியுள்ளன.

கறுப்புப் பணக்கடத்தலால் ஸ்ரீலங்காவின் உள்ளக வளப் பிரயோகம் மிகப் பாதகமாகத் தாக்கமடைந்திருப்பதுடன் நிலையான பொருளாதார அபிவிருத்தி என்பதனையும் கேள்விக் குறியாக்கி -யுள்ளது என குறித்த அறிக்கையின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்ரீலங்காவில்....

எனவும் அவ்வறிக்கை கூறுகிறது.

சிறைச்சாலைகளில் அடைக்கப்-பட்டுள்ளவர்கள் தொடர்பில் சரியான வழிமுறைகள் பின்பற்றப்படாத காரணத்தால், அங்கு நெரிசல் மிகுந்து காணப்படுவதையும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்பவர்களின் மனித உரிமைகள் புறந்தள்ளப்படுவது பிரச்சினைக்குரிய ஒரு விடயமாகவே இருந்து வருகிறது எனக் கூறும் அந்த அறிக்கை, பெண்கள் மற்றும் சிறார்கள் மீதான பாலியல் வன்முறையும் கவலையளிக்கின்றன எனவும் கூறுகிறது.

தொழிலாளர் உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள், சிறார் தொழிலாளர் ஆகிய பிரச்சினைகளும் அங்கு உள்ளன என அமெரிக்க அரசின் வெளியுறவு அமைச்சகத்தின் ஆண்டறிக்கை கூறுகிறது.

## திருமலை மாணவர்...

இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியே சர்வதேச மன்னிப்புச் சபையால் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேலும் 5 மாணவர்கள் கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் சம்பவம் உட்பட 15 மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட விசேட குழு, 2009 ஆம் ஆண்டு குறித்த விசாரணை அறிக்கையை முன்னாள் சனாதிபதியிடம் கையளித்துள்ளது.

இந்த நிலையில் குறித்த கொலைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை -கள் காலதாழ்த்தி நடைபெறுவதால் குறித்த மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் மரணத்திற்கு நியாயம் கிடைக்கும் என மிக நீண்டகாலமாக எதிர்பார்த்து காத்துள்ளனர்.

எனவே, பொறுப்புக் கூறும் அதிகாரிகள் அநீதியான முறையில்

## அனல் மின்நிலைய...

மூதூர் பசுமைக் குழு அமைப்பிற்கும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று புதன்கிழமை (13.04.2016) மாலை இடம்பெற்றது.

சம்பூர் பகுதியில் அமையவுள்ள அனல் மின்சார நிலையம் தொடர்பாக மூதூர் சேப் ரெஸ்ட் மண்டபத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர், கே. நாகேஸ்வரன், ஆர்.எம்.அன்வர் ஆகியோரோடு மூதூர் பசுமைக்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது சம்பூரில் அமைக்கப்படவுள்ள அனல்மின்சாரத் திட்டத்திற்கு எதிராக அடிப்படை மனித உரிமை வழக்கொன்றை தாக்கல் செய்தல், சனாதிபதி அல்லது பிரதமரை சந்தித்து கலந்துரையாடல் ஆகிய தீர்மானங்கள் எட்டப் -பட்டுள்ளன.

(அச்சுதன்)

## காணாமலாக்கப்......

ஒன்றினை பெற்றுத் தருமாறும் பிரதேச செயலாளர் யூசுப் அவர்களிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப் பட்டது. அதன் பிரதிகள் மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண ஆளுநர், சனாதிபதி ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது.

இக்கவனயீர்ப்பிற்கும் "கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் சங்கங்களின் அமைப்பிற்கும்" எவ்வித தொடர்பும் இல்லையென பிரசைகள் குழுவின் தலைவர் சிவஸ்ரீ. பாஸ்கரன் குருக்கள் தெரிவித்தார்.

"வேறு எந்த பிரசைகள் குழுக்களோ அல்லது இங்குள்ள காணமல் ஆக்கப்பட்டோரின் சங்கமோ இந்நிகழ்வுக்கு உதவியோ ஒத்துழைப்போ வழங்கவில்லை என்பதை கூறிக்கொள்ள விரும்புகின்றோம். .

ஆகவே எமது பாதிக்கப்பட்ட மக்களை -யோ எமது சங்கத்தையோ தங்களுடன் தொடர்புபடுத்தி தங்கள் அமைப்பின் சுயலாபத்திற்கு பயன்படுத்தியவர்களை இட்டு மனவேதனை அடைகின்றோம்." என பாஸ்கரன் குருக்கள் அனுப்பி வைத்தள்ள செய்தியில் தெரிவித்து -ள்ளார்.

## ஈழத்தைக் கைவிட்....

இணைந்த வடக்குகிழக்கின் முதலாவது முதலமைச்சராகப் பதவி வகித்தவர் வரதராசப்பெருமாள். அதனுடன் அவரது காலத்திலேயே தமிழீழப் பிரகடனத்தை வடக்கு -கிழக்கு மாகாண சபை நிறைவேற்றி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

"எனது சிறுவயது தொடக்கம் தமிழ் அரசியல் வெளியின் பல காட்சிகளுக்குச் சாட்சியாகவும், தமிழ் இராணுவ அமைப்பின் உறுப்பி -னராகவும், பின் அரசியலாளனாகவும் உள்ளவன் நான்.

இந்நிலையில் எமது அரசியல் சித்தாந்தங்களை மாற்றிக்கொண்டு முன்னோக்கிச் செல்லும் சக்திகளுடன் பயணிக்க வேண்டுமேயொழிய, அம்முன்நிலைச் சக்திகளுடன் முரண்படுதல் ஆகாது. அதனடிப்படையில் கடந்த நான்கு தசாப்தங்களாக நான் பெற்றுள்ள

அனுபவ அரசியலின் முடிவாக எமது கடும் நிலைப்பாடுகள் எவ்வகையிலும் தற்போதைய எமது அரசியல் நடவடிக்கைகளின் போது வெளிப்படக் கூடாது என்றே கருதுகின்றேன். வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் அவா, இத்தீவின் இறையாண்மைக்குப் பங்கம் விளைவிக்காவண்ணம், கருத்தாளம் மிக்க வகையில் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் பிரிவினையைக் கைவிடத் தயாராகவுள்ள நிலையில், "ஈழம்" என்ற வார்த்தையைத் தாங்கியிருக்க வேண்டிய தேவையில்லை.

எனவே புதிய பெயரை பெற்றுக்கொள்ள கட்சி அங்கத்த -வர்கள் அனைவரது ஒப்புதலுடன் முடிவெடுத்தோம்'' என அவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தீன் முரசு

# இஸ்லாத்தின் பார்வையில் முட்டாள்கள் தினம்




இன்னும் பல கற்பனைக் கதைகளும் புராணக்கதைகளும் சொல்லப்படுகிறது.

**உண்மையான வரலாற்றுப்பிண்ணனி**

காலண்டர் மாற்றமே முட்டாள்கள் தினம் உருவாக முக்கியக் காரணம். அதாவது கி.பி. 1582 வரை ஃபிரான்ஸில் ஏப்ரல் மாதம் தான் ஆண்டின் முதல் மாதமாகவும், மார்ச் மாதம் ஆண்டின் இறுதியாகவும், மார்ச் 25ல் இருந்து ஏப்ரல் 1 வரை புத்தாண்டுக் கொண்டாட்டங்களும் உலகம் முழுவதும் நடைபெற்று வந்தன.

"கிரிகோரி" என்கிற போப் தான் இன்று நடைமுறையில் இருக்கின்ற ஆங்கிலக் காலண்டரை உருவாக்கியவர். அதாவது ஜனவரியை ஆண்டின் முதல் மாதமாகவும் டிசம்பரை ஆண்டின் இறுதி மாதமாகவும் வைத்து உருவாக்கப்பட்ட இந்தக் காலண்டரை பலர் ஏற்றுக்கொண்டனர். இன்னும் சிலர் பழைய காலண்டர் முறையையே பின்பற்றி வந்தனர்.

புதிய காலண்டர் முறைப்படி மாறியவர்கள் பழைய காலண்டர் முறையைப் பின்பற்றி நடப்பவர்களை முட்டாள்கள் என கேலி பேசவும், கிண்டலடிக்கவும் ஆரம்பித்தனர். இதுவே நாளடைவில் ஏப்ரல் 1 அன்று முட்டாள்கள் தினம் அனுசரிக்கக் காரணமாக அமைந்து விட்டது.

ஃபிரான்ஸிலிருந்து லண்டன், அமெரிக்கா, மெக்ஸிகோ, ஸ்காட்லாந்து, இங்கிலாந்து, கரீபியன், ஜமைக்கா, கானா போன்ற நாடுகளுக்கும் பரவ ஆரம்பித்து இன்று உலகம் முழுவதிலும் உள்ள பல நாடுகளுக்கும் பரவி இருக்கிறது.

தொடரும் .. ..

– காஜா முஹிய்யுத்தீன் –

# ஜெபம்



**கடவுள் பாவிகள் உட்பட அனைவரையும் நிபந்தனையற்ற முறையில் அன்பு செய்கின்றார் எனில் நரகம் என்று ஒன்று எதற்கு?**

கடவுள் அனைவரையும் நிபந்தனையற்ற வகையில் அன்பு செய்வது உண்மைதான். ஆனால் அனைவருக்கும் நிபந்தனையற்ற மீட்பை கொடுப்பதில்லை. மனிதனுக்கு கடவுளை அன்பு செய்யவும் அல்லது புறக்கணிக்கவும் கூடிய அளவில்லா சுதந்திரத்தை கொடுத்திருக்கிறார். கடவுள் மனிதரை அடிமையாகவோ அல்லது சொன்னதை செய்யக்கூடிய இயந்திர மனிதராகவோ படைக்கவில்லை. கடவுள் மனிதரை அன்பில் வாழ கட்டாயப்படுத்துவதில்லை. அன்பு என்பது மனிதனின் இதயத்திலிருந்து தானாக வெளிப்பட வேண்டும்..

ஏனெனில் மனிதன் கடவுளின் அன்புருவாக படைக்கப்பட்டிருக்கின்றான். நம்மிடம் கடவுள் எதிர்பார்ப்பது நாம் அனைவரும் சுதந்திர மக்களாக கடவுளன்பில் வாழவேண்டுமென்பதே. இத்தகைய அன்பைப் புறக்கணிப்போர் கடவுளைப் புறக்கணிக்கின்றனர். கடவுளுடைய அன்புறவை தெரிந்தே புறக்கணிப்பர்கள் நரகத்திற்குச் செல்வார்கள்.

**விசுவாசத்தால் மட்டுமே மீட்பு பெற முடியுமா?**

16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கத்தோலிக்க குருவாக இருந்த மார்டின் லூதர் கத்தோலிக்கத் திருச்சபையில் மறுமலர்ச்சி இயக்கத்தை ஆரம்பித்தார்.

அதன்படி கிறிஸ்தவர்கள் மீட்படைய விசுவாசம் (இயேசு கிறிஸ்துவின் மேல் பற்றுறுதி, நம்பிக்கை) ஒன்றே போதும் நம்முடைய எந்த முயற்சிகளும் நற்செயல்களும் மனிதருக்கு மீட்பை தராது என்பது அவரது வாதம்.

தொடரும் ..

www.bible.me

# இவ்வார இராசி பலன்

**மேஷம்** : செயல்கள் நேர்த்தியாக அமையும். பணவரவு கூடும். குடும்ப பிரச்னைகளில் தீர்வு கிடைக்க பொறுமை வேண்டும். நிர்வாகத்திடம் நற்பெயர் பெறுவர்.

**ரிஷபம்** :வஞ்சகமாக பேசுபவர்களால் பிரச்னை வரலாம். பணிகளில் முன்னேற்றம் உருவாகும். சேமிப்பு பணம் கரைய வாய்ப்புண்டு. மாணவர்கள் சிறப்புறுவர்.

**மிதுனம்** : தைரியமான மனதுடன் செயல்படுவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். வியாபாரம் அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

**கடகம்** : நற்பெயரை பாதுகாக்கும் எண்ணத்துடன் செயல்படுவீர்கள். அதிக பண வரவு பெறுவீர்கள். கடன்களை செலுத்துவீர்கள். வியாபாரம் வளர்ச்சி பெறும்.

**சிம்மம்**: உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். முக்கிய பணிகள் சிறப்பாக நிறைவேறும். பணவரவு சுமாராக இருக்கும். செலவு எல்லை மீறும். எதிரிகளிடம் விலகவும்.

**கன்னி**: பேச்சில் நிதானம் வேண்டும். உங்களை குறை சொன்னவர்கள் வியந்திடும் வகையில் பணிபுரிவீர்கள். வியாபாரம் செழித்து வளரும். வெகுமதி கிடைக்கும்.

**துலாம்** : மனதில் பட்டதை சூழல் உணர்ந்து பேசுவது நல்லது. க்'டம் விலகி வளர்ச்சி உருவாகும். அதிக உழைப்பினால் தொழில். வளரும். கடனில் ஒரு பகுதி குறையும்.

**விருச்சிகம்**: நிறைவேற்றி முடித்த பணிகளில் வியத்தகு வருமானம் கிடைக்கும். பேச்சில் கவர்ச்சி கூடும். இலக்கை அடைய கடும் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும்.

**தனுசு** : மனம் நிம்மதியாக இருக்கும். சொத்து ஆவணங்களை, பிறர் பொறுப்பில் தரக்கூடாது. வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். வருமானம் கூடும்.

**மகரம்** :மனதில் புத்துணர்வு ஏற்படும். பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்றுவீர்கள். வியாபாரம் செழித்து நிறைந்த லாபம் கிடைக்கும். சேமிப்பு அதிகரிக்கும்.

**கும்பம்**: தாமதமான பணிகளை முயற்சி செய்து நிறைவேற்றுவீர்கள். சிக்கனமாக இருக்கவும். வியாபாரம் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மீனம்** :பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். வியாபாரம் செழித்து வளர, புதிய வாய்ப்பு வரும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கடுமையாக இருக்கும்.

# இடைக்கால நீதியும் பெண்களும்

செல்வி வினுசியா கமலேஸ்வரன்
செயலாளர்
திருகோணமலை மாவட்ட பெண்கள் வலையமைப்பு

முப்பது ஆண்டகால யுத்தம் முடிவிற்கு வந்து எமது நாடானது சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் தற்கால சூழலில் அரசும் சிவில் சமூக குழுக்களும் நல்லிணக்கத்திற்காக மும்முரமாக பாடுபட்டுக்கொண்டுவரும் சூழலில் பெண்களாகிய நாம் எமக்கெதற்கு இந்த வேலைகள் என ஒதுங்கிட முடியாது.

இடைக்கால நீதி உண்மை, நீதி, இழப்பீடு, மறுசீரமைப்பு இந்த நான்கு விடயங்களிலும் இடம்பெற்ற யுத்த அசாதாரண சூழலினால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட எம் பெண்கள் முக்கியமானவர்கள்.

கணவன் காணாமல் ஆக்கப்பட்ட பெண்கள், கணவன் இறந்த பெண்கள், கணவன் கைதியாக அல்லது புனர்வாழ்வு அளிக்கப்பட்ட நிலையில், அல்லது கணவன் உடல் அங்கவீனமுற்ற நிலையில் என பல விதங்களில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களும் உடல் அங்கவீனமுற்ற பெண்களையுமே இவ் யுத்தம் தோற்றவித்துள்ளது.

யுத்தம் தந்த வடுக்களையும் இன்னும் சுமந்த வண்ணம் இருப்பவர்கள் பெண்களே.

எனவே தான் எனது கணவனை அல்லது பிள்ளையை காணவில்லை என்று அதிகம் பெண்களே வீதிகளில் நிற்பதை காணலாம். தமது பிரதான வருமானதாரர் காணாமல் ஆக்கப்பட்ட நிலையில் இரண்டு விதமான சுமைகளை சுமக்கவேண்டியவர்களாக அவர்கள் மாறியுள்ளனர். தனது குடும்ப வருமானத்தை ஈட்ட வேண்டிய அதே வேளை தனது கணவனை அல்லது மகனை தேட வேண்டும் இவ்வாறு நின்று நின்று அப்பெண்கள் சோர்ந்து எமது சமூகத்திலிருந்து தமக்கு ஆதரவு கிடைக்காமலும் போராடி வரும் பெண்கள் ஒருபுரம் இது போல கணவனை யுத்தத்தின் கோர பிடியில் காலனிடம் கொடுத்துவிட்டு குடும்ப சுமைகளை தன் தோளில் சுமந்து வாழும் எம் யுத்தத்தினால் விதவைகள் ஆக்கப்பட்டோர் ஒரு புறம் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சொல்லொண்ணா துயர்களை கடந்து வாழ்த்துடிக்கும் இளம் பெண்கள் மறுபுறம்.

தமது உடல் அங்கங்களை இழந்த பெண்கள் அல்லது கணவனுக்கு அந்த நிலை என இப்படியான சூழலில் தமது வாழ்வை போராட்டமாக கழித்து வருகின்ற இப்பெண்களை தவிர்த்த நல்லிணக்கம் என்பது பேச்சளவிலானதன்றோ?

இந்நிலையில் மறுபக்கம் பாதிப் பின்



சுவரை மட்டும் பார்த்த எம் ஏனைய பெண்கள் எமக்கென்ன என அதனை வேடிக்கை பார்ப்பதும் அதிலிருந்த ஒதுங்கி நிற்பதும் நியாயமற்ற காரியம். ஏனெனில் எமது சமூகம் ஒட்டுமொத்தமாக எதிர்நோக்கிய பாரிய பிரச்சினைகளின் சுவடுகளே இவை. அவர்கள் அவர்களுக்கான சரியான தீர்வின்றி நல்லிணக்கம் என்பது சாத்தியமற்ற விடயமாகும்.

எனவே அரசியல் தலைமைகளும் அதிகாரிகளும் மறந்து போன இப்பெண்களின் நிலை என்ன? இவர்களுக்கான சரியான தீர்வினை முன்-வைப்பவர் யார்? என்ற கேள்வி-களை கேட்பவர்களாக அனைத்து பெண்களும் மாற வேண்டும்.

அந்த பெண்களுக்காக நம் குரல்கள் ஒன்றிணைய வேண்டும். அப்போதுதான் எமது நாட்டில் நல்லிணக்கம் சாத்தியமான ஒன்றாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு முரசு

டென்னிஸ்

## முதல்நிலை வீரர் தோல்வியை தழுவினார்



உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரரான நொவாக் டிகோவிச் செக் குடியரசு வீரரான ஜெரி வெஸ்லியிடம் தோல்வியடைந்துள்ளார். மொன்டோ கார்லோ மாஸ்டர்ஸ் கிண்ணத்திற்கான போட்டியிலேயே டிக்கோவிச் தோல்விடையந்துள்ளார்.

மொனாக்கோவில் நடைபெறும் மொன்டோ கார்லோ மாஸ்டர்ஸ் கிண்ண போட்டியில் உலகின் முதல் நிலை டென்னிஸ் வீரர் நொவாக் டிக்கோவிச்சை ஜெரி வெஸ்லி ஆறுக்கு நான்கு இரண்டுக்கு ஆறு ஆறுக்கு நான்கு என்ற செட்களில் தோற்கடித்தார். இந்தத் தோல்வி இந்த ஆண்டில் டிக்கோவிச் அடைந்த 2வது தோல்வியாகவும் பதிவாகியுள்ளது.

வெஸ்லி சிறப்பாக திறமையை வெளிப்படுத்தி முதல் சுற்றில் டிக்கோவிச்சை ஆளுக்கு நான்கு என்ற புள்ளிகள் அடிப்படையில் தோற்கடித்தபோது டிக்கோவிச் வழமையான திறமையை வெளிப்படுத்தி-யிருக்கவில்லை.

கிரிக்கட்

## ஐபிஎல் போட்டிகள்

## இடம்பெறும் இடங்கள் உடனடியாக மாற்றப்படுகிறது

இந்தியாவின் மராட்டிய மாநிலத்தில் இம்மாதம் 30ஆம் திகதிக்கு பிறகு நடைபெற திட்டமிடப்பட்டிருந்த அனைத்து ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளையும் வேறு இடங்களுக்கு மாற்றுமாறு மும்பை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

...மையான வறட்சியில் சிக்கியுள்ள அந்த ...லத்தில் ஆடுகளங்களுக்கு தேவைப்படும் ...ணீரை விநியோகிப்பது தொடர்பில் ...மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. ...த் திகரிக்கப்பட்ட கழிவுநீரையே ஆடுகளங்களை தயார் செய்ய ...யன்படுத்துவோம் என இந்தியக் கிரிக்கெட் ...பை அளித்த விளக்கத்தை இரண்டு ...திபதிகளைக் கொண்ட அமர்வு ...ிராகரித்துவிட்டது.

...தையடுத்து மும்பையில் மே மாதம் 29 ஆம் திகதி நடைபெறவிருந்த இறுதி ஆட்டம் உட்பட 13 ஆட்டங்களை வேறு இடங்களுக்கு மாற்றும்படி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மாநில அரசும், இந்தியக் கிரிக்கெட் வாரியமும் கடுமையான வறட்சி நிலவும் சூழலில், அதிகரித்து வரும் பொதுமக்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கவில்லை என வழக்கு விசாரணையின்போது நீதிபதிகள் சாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

INDIAN PREMIER LEAGUE

...ல்பந்தாட்டம்

## அரையிறுதிக்குள் நுழைந்தது

## மென்செஸ்டர் யுனைடட் அணி

இங்கிலாந்தின் பிரபல்யமான ...ந்தாட்டப் போட்டித் தொடர்களில் ஒன்றான ... கிண்ணம் என அழைக்கப்படும் ...ந்தாட்டக் கழக கிண்ணத்திற்கான ...டித் தொடரில் மென்ச்செஸ்டர் யுனைடட் ...கம் வெஸ்ட் ஹம் கழகத்தை இரண்டுக்கு ...ன்று என்ற கோல் கணக்கில் ...ற்கடித்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மென்ச்செஸ்டர் யுனைடட் கழகம் எப்.ஏ கிண்ணத்திற்கான அரையிறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது. இங்கிலாந்து கால்பந்தாட்ட கழக கிண்ணத்திற்கான போட்டியில் மென்ச்செஸ்டர் யுனைடட் அணியின் இளம் வீரர்களான மார்க்கஸ் ரஷ்போர்ட் மற்றும் மரூனே பெலானிஸ் ஆகியோர் இரண்டாவது பாதியில் அடுத்தடுத்து இரண்டு கோல்களை அடித்து அணியின் வெற்றியை உறுதிசெய்தனர்.

## ஒய்வு பெறும் டெய்லர்

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட ...ீரரான ஜேம்ஸ் டெய்லரின் ...தயத்தின் வலது அறையில் தசை ...ங்கி விரிவதில் பிரச்சினை ...ணப்படுவதனால் ஒய்வு பெறுமாறு ...ியுறுத்தப்பட்டது. ...நிலையிலேயே இவர் ஒய்வு ...வுள்ளதாக அறிவித்துள்ளார்.

...லாந்து அணிக்காக 7 டெஸ்ட் ...ாட்டிகளில் விளையாடி 312 ...ட்டங்களையும், 27 ஒரு நாள் ...ாட்டிகளில் விளையாடி ஒரு சதம், ... அரைசதம் உள்ளிட்ட 887 ...டங்களையும் பெற்றுக் ...ண்டுள்ளார். நடுத்தர வரிசையில் ...லு சேர்க்கும் வகையில் ஆடி வந்த ஜேம்ஸ் டெய்லருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு, இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களை அதிர்ச்சிக்குள்ளா-க்கியுள்ளது.

## சச்சினின் சுயசரிதை


## திரைப்படமாக்கப்பட்டது

கிரிக்கட்

சச்சினின் சுயசரிதையை இங்கிலாந்தை சேர்ந்த இயக்குநர் ஜேம்ஸ் எர்ஸ்கைன் திரைப்படமாக தயாரித்துள்ளார். இப்படத்தில் சச்சின் முதன்முறையாக நடித்துள்ளார். இதன் போஸ்டரில், கிரிக்கெட் மட்டை ஒன்றை சுமந்து கொண்டு கால்கவசம் அணிந்தபடி மைதானத்தில் சச்சின் நடந்து செல்வது போன்ற காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து டுவிட்டரில் சச்சின் வெளியிட்-டுள்ள செய்தியில், பல வருடங்களாக என் மீது அன்பு செலுத்தி, ஆதரவளித்து வரும் உங்கள் அனைவருக்கும் நன்றி! ஏப்ரல் 14 ஆம் திகதி மதியம் 1 மணி அளவில் வெளியாகும் டீசரை காணுங்கள் என தெரிவித்துள்ளார்.

மும்பையை சேர்ந்த 200 நொட் அவுட் என்ற தயாரிப்பு நிறுவனம் இப்படத்தினை தயாரித்துள்ளது. இதுவரை 200 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள சச்சின், சர்வதேச ஒரு நாள் போட்டி, டெஸ்ட் மற்றும் T –20 என 3 நிலைகளிலும் சேர்த்து 100 சதங்களை கடந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.






## தலைமறைவாக இருந்த

## மல்லையா பங்குதாரரானார்

இந்திய வங்கிகளில் ரூ.9 ஆயிரம் கோடி கடன் பாக்கி வைத்து விட்டு தலைமறைவாக உள்ள பிரபல தொழிலதிபர் விஜய் மல்லையா, கரீபியன் பீரிமியர் லீக் தொடரில் பார்படோஸ் அணியை விலைக்கு வாங்கியுள்ளார். ஐபிஎல் தொடரில் பெங்களூர் றொயல்சேலஞ்சர்ஸ் அணியின் முக்கிய பொறுப்புகளிலிருந்து விலகியதை-யடுத்து, கடந்த பெப்ரவரி மாதம் இந்த புதிய அணிக்கு பங்குதாரர் ஆகியிருப்பதாக மல்லையா கூறியுள்ளார்.

இதற்காக இந்திய மதிப்பில் சுமார் 6 ஆயிரத்து 500 ரூபாய் மட்டுமே செலவழித்துள்ளதாக தெரிவித்த மல்லையா, அந்த அணியின் மதிப்பு சுமார் ரூ.130 கோடியாக உள்ள நிலையிலும், மற்ற உரிமையாளர்கள் தன்னையும் பங்குதாரராக இணைத்துக் கொள்ள சம்மதித்ததாக குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே பாலிவுட் நடிகர் ஷாருக்கானும் கரீபியன் பீரிமியர் லீக்கில் ஒரு அணியின் உரிமையாளராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ரெய்னாவின் சாதனை முறியடிப்பு

ஐபிஎல் தொடரில் மும்பை அணிக்கு எதிரான லீக் ஆட்டத்தில் கொல்கத்தா அணியின் தலைவர் கவுதம் கம்பீர் புதிய சாதனை படைத்துள்ளார்.

நடைபெற்ற 5வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை வீழ்த்தியது. இந்த போட்டியில் கொல்கத்தா அணியின் தலைவர் கவுதம் கம்பீர் 52 பந்தில் 64 ஓட்டங்கள் எடுத்தார். இது அவருக்கு 27வது அரை சதமாக அமைந்தது. இதன் மூலம் ஐபிஎல் தொடரில் அதிக அரை சதம் அடித்திருந்த சுரேஷ் ரெய்னாவின் சாதனையை அவர் முறியடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஸ்ரீலங்காவில் துன்புறுத்தல்கள் தொடர்கின்றன" - அமெரிக்கா



ஸ்ரீலங்காவில் சில முன்னேற்றங்கள் இருந்தாலும், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சில கவலைகள் உள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக அறிக்கை கூறுகிறது.

அங்கு தொடர்ந்தும் சமூக ஆர்வலர்கள், ஊடகவிய-லாளர்கள் ஆகியோர் துன்புறுத்தப்படுகிறார்கள் என அந்த அறிக்கையில் கூறப்பட்டு -ள்ளது.

அதேபோல் விடுதலை புலிகளின் ஆதரவாளர்கள் கருதப்படுபவர் க துன்புறுத்தல்களை ஏதிர்செ நேரிடுகிறது எனவும் அறிக்கை தெரிவிக்கிறது.

காரணங்கள் இன்றி ஆ தடுத்துவைக்கப்படு பாலியல் பலாத்காரம், பா சார்ந்த வன்முறை ஆகியவையும் இலங்கை கடந்த ஆண்டு இடம்பெற்றுள்ளன

## சம்பூர் அனல்மின்நிலையம்
## 2018ற்கு முன் துயாராகவிட்டால் வருடாந்தம் 50 பில்லியன் செலவு

எதிர்வரும் 2018ம் ஆண்டுக்குள் சம்பூர் அனல் மின்நிலையத்தின் ஊடாக மின்சாரம் கிடைக்காது விட்டால் வருடமொன்றுக்கு ரூபா.50 பில்லியன்களைச் செலவு செய்ய வேண்டி ஏற்படும் என சிரேட்ட மினசபை எந்திரி ஒருவர் தேசிய ஆங்கில நாளிதழின் வாராந்தப்பதிப்பிற்குச் செவ்வியுள்ளார்.

"இந்த மின் திட்டத்தின் பங்காளியான இந்தியா சரியான முறையில் சூழல் தாக்க ஆய்வறிக்கையைச் சமர்ப்-பித்திருக்குமானால் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்காது.

அரசாங்கம் இத்திட்டத்தினை வேகமாக நிறைவேற்றி 2018ம் ஆண்டளவில் தேசிய மின் வினியோகத்திற்கு '500 மெகாவோற்று மின்சாரத்தை வழங்க வேண்டும். இல்லாவிட்டால் வருடாந்தம் 5ழ பில்லியன்களைச் செலவு செய்தே ஏனைய வழிகளில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என அச்சிரேட்ட மின் எந்திரி தெரிவித்துள்ளார்.



## மீளக்குடியேற்றியதால் கடினங்கள் உருவாகின்ற
### - ரிங்கோமலி பவர் கொம்பனி லிமிடெட் -

சம்பூரில் மக்களைக் குடியமர்த்தியமையானது மேலும் பிரச்சனைகள் உருவாக வழிசமைத்திருப்-பதாக சம்பூர் அனல் மின்நிலைய கூட்டுமுயற்சிக் கம்பனியான "ரிங்கோமலி பவர் கொம்பனி லிமிட்டெட்"ன் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

"உதாரணமாக நிலக்கரியை போக்குவரவு செய்யப்படும் பாதையின் மருங்குகளில் மக்கள் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந் நடவடிக்கை மிகப்பெரிய பிரச்சனையாக உருவெடுக்க இருக்கின்றது" என அக்கம்பனி அதிகாரியொ தெரிவித்துள்ளார்.

மேலும் திட்டமிஜடப்பட்டுள்ள மின்நிலையத்திற்கு 300 முறைப்பாடு தாங்க புதிலளித்திருப்ப ம் தெரிவித்

## "ஈழத்தைக்" கைவிட்டார் வரதராசப்பெருமாள்

**ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** (நாபா) பிரிவு என்ற கட்சியின் பெயரில் இருந்து "ஈழம்" "புரட்சிகர" ஆகிய வார்த்தைகளை நீக்கிப் புதிய கட்சிப் பெயரொன்றைத் தேர்வு செய்துள்ளார் அக்கட்சியின் செயலாளர் நாயகம் வரதராசப்பெருமாள்.

தமிழ் மக்கள் சோசலிச சனநாயகக் கட்சியென்ற பெயரையே தமது அணிக்கான புதிய பெயராக அவர் அறிவித்துள்ளார்.

புதிய பெயரானது தற்போதைய அரசியல் சூழலுக்கு மிகப் பொருந்தும். என்பதாலும் சமூகம் சார்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவியாக இருப்பதாகவும் ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில் வரதராசப்பெருமாள் தெரிவித்துள்ளார்.






## "காணாமலாக்கப்பட்டோரைக் கண்டறிந்து தாருங்கள்"
### மூதூரில் உறவுகள் மீண்டும் போராட்டம்



**"இப் போராட்டத்திற்கும் "கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காண ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் சங்கங்களி அமைப்பிற்கும்" எவ்வித தொடர்பும் இல்லை"**

**- சிவஸ்ரீ பாஸ்கரன்**



திருகோணமலை மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவின -ர்களால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தை மூதூர் பிரசைகள் குழுவும், மூதூர் இந்தக்குரமார் சங்கமும் இணைந்தே நடத்தியதாக பிரசைகள் குழுவின் சிவஸ்ரீ.பாஸ்கரன் தெரிவித்தார்.

மூதூர் பிர செயலகத்தின் மு நடைபெ இக்கவனயீர்ப்பின் காணாமலாக்கப்பட் உறவுகள் பற்ற தீர்க்கமான முடிவு....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரந்தப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீ திருகோணமலையில் இருந்து 16.04.2016ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.